REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்

2024 ஜூன் 22 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வருட. 92 இல. 148 | Saturday 22, June, 2024 | 10 பக்கங்கள் | 50/-

## உலக சந்தையில் சீனியின் விலை 2.32 வீதம் குறைவு



உலக சந்தையில் சீனியின் விலை பாரியளவில் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரேசிலில் (Brazil) கரும்பு அறுவடை கடந்த 04 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளது. இதனால், பிரேசிலின் சீனி உற்பத்தி 11.8 வீதம் அதிகரித்ததை

06

### மருந்துகள், எரிபொருள், உரம் எதுவும் கிடைக்காது

# துன்பப்பட்ட காலத்தை எவரும் மறக்கக் கூடாது

## அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டுக்குத் தேவையான மருந்துகள், எரிபொருள், உரம் போன்றவற்றைக் கொள்வனவு செய்ய பணமில்லாமல் துன்பப்பட்ட கடந்த காலத்தை யாரும் மறந்துவிடக் கூடாது. இவ்வாறான இருண்ட அனுபவத்தை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லாமல் புதிய பொருளாதார மாற்றத்தினூடாக இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொரலஸ்கமுவ கோல்டன் ரோஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் 09 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

06

## இலங்கையின் கடன்பேண் தன்மைக்கு தொடர்ந்தும் ஆதரவு



இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கும் கடன்நிலைத் தன்மைக்கும் தொடர்ந்தும் ஆதரவளிக்கப்போவதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் இதனை தெரிவித்துள்ளார்.

சீனாவின் எக்ஸிம் வங்கி மற்றும் சீனாவின் அபிவிருத்தி வங்கிகள் என்பன இலங்கையுடன் இறுதி உடன்பாட்டை எட்டும் விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த

06

### ஹஜ் யாத்திரையின் போது

## உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!



ஹஜ் யாத்திரையின் போது இவ்வருடம் கடுமையான வெப்பம் தொடர்பான பிரச்சினைகளால் உயிரிழந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை

06

### நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால்

## சேதமடைந்துள்ள வீடுகளுக்கு இழப்பீடு வழங்க ஜனாதிபதி ரணில் அறிவுறுத்து



சாகல ரத்நாயக்க

சீரற்ற காலநிலை காரணமாக முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்குவதற்கு அல்லது அந்த வீடுகளை மீண்டும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார். அதே நேரம், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை

06

## ஜனாதிபதி ரணிலால் மட்டுமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்

### அவருக்கு வாக்களிக்க தமிழ் மக்கள் தயார்; கருணா அம்மான்



ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில், ஜனாதிபதி

06

### நாட்டை மீட்டெடுப்பதற்காக

## ஜனாதிபதி செய்த பொருளாதார அதிசயம் உலகளவில் அங்கீகாரம்

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன



அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் என்பது, தாம் நட்டம் அடைந்தேனும் நாட்டுக்கு இலாபம் ஈட்டித் தருவதற்காக செயற்பட்ட சங்கமாகும். கடந்த இக்கட்டான

06

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால்

## ஒரு Kg ஜெக் மக்கரல் மீன் பக்கற் நேற்று முதல் சந்தைக்கு அறிமுகம்




இலங்கையில் முதல் தடவையாக தேசிய ரின்மீன் உற்பத்தி நிறுவனமான Slic Lanka Fisheries Pvt. Ltd. நிறுவனத்தினால் தனது நவீன தயாரிப்பான நீண்ட நாட்களுக்கு பழுதடையாமல் பாதுகாக்கக் கூடிய ஒருகிலோ எடை கொண்ட ஜெக் மெக்கரல் செமன் பக்கற் ஒன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இப்புதிய தயாரிப்பை சந்தைக்கு

06

## EPF தரவுகளை கண்டறிய Digital தரவு கட்டமைப்பு

### உடன் தயாரிக்குமாறு COPA குழு அறிவுறுத்து

ஊழியர் சேம நிதியம்
Employees' Provident Fund

மத்திய வங்கியும் தொழில் திணைக்களமும் இணைந்து ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட தரவுகளைப் பெறக்கூடிய டிஜிட்டல் தரவு கட்டமைப்பைத் தயாரிக்குமாறு தொழில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கக் கணக்குக் குழு, அறிவுறுத்தியுள்ளது.

06

## கடல் வழியாக தமிழகம் சென்ற இலங்கையர் இருவர் கைது

இலங்கையிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் நுழைந்த இரு இலங்கையர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இராமேஸ்வரத்தையடுத்த தனுஷ்கோடி கம்பிப்பாடு தெற்கு கடற்கரை பகுதியில் இலங்கையைச் சேர்ந்த கண்ணாடி இழை படகொன்றில் இருவர் சென்றுள்ளனர். இவ்வாறு தமிழக கரையில் சென்றிறங்கியவர்கள் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற இராமேஸ்வரம் கரையோர பொலிஸார், இருவரையும் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். விசாரணையில் அவர்கள் இருவரும் புத்தளம் மாவட்டத்தை சேர்ந்தவர்களென தெரியவந்துள்ளது.

### பொசன் பௌர்ணமி தினம்

## 289 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு



பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 289 கைதிகள் ஜனாதிபதி விசேட பொது மன்னிப்பின் கீழ் நேற்று வெள்ளிக்கிழமை (21) விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. வெலிக்கடை

06

## 13ஆவது எவரதும் தந்தை வழிச்சொத்தல்ல அரசியலுக்காக பயன்படுத்துவோர் துரோகிகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கட்சித் தலைவர், தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்ற காரணத்துக்காக அதை வைத்து நாட்டின் தலைவர்களை தெரிவு செய்ய முற்பட வேண்டாம். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடக்கும். சிறந்த, நாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் திறமையுடைய தலைவரை தெரிவு செய்ய வேண்டும் என்று நான் மக்களிடம் வணங்கி கேட்டுக் கொள்கிறேன் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

### இந்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர்

## இலங்கை–இந்திய சர்வதேச கடல் எல்லையில் ஆய்வு



இந்தியாவின் இராமேஸ்வரத்தையடுத்து தனுஷ்கோடி அரிச்சல் முனையில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய பாதுகாப்பு துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத், இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் செய்யப்பட்டுள்ள


06



03

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் மாத்தளை மாவட்டத்திற்கு விஜயம்

## தங்கக்கட்டிகள் கடத்திய விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி கைது



சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சுமார் 02 கிலோவுக்கும் அதிகமான தங்க பிஸ்கட்டுகளுடன் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுகளின் மதிப்பு இதுவரை கண்டறியப்படவில்லையென சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சுங்க போதைப்பொருள் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கடும் பசி, தூக்கத்தில் இருந்த நபர் உயிரிழந்ததாக ஆஸ்பத்திரியில் அனுமதி

### பிரேத பரிசோதனையின்போது கண்டுபிடிப்பு

புத்தளம், மதுரங்குளி பகுதியில் உயிரிழந்ததாக கூறப்பட்ட நபரொருவர் பிரேத பரிசோதனையின் போது உயிருடன் இருப்பது கண்டறியப்பட்ட சம்பவம் பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இப் பகுதியிலுள்ள தென்னங்காணியில் பணிபுரிந்து வந்த ஒருவர் உயிரிழந்துவிட்டதாக காணியின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இவர் தென்னந்தோட்டத்தினுள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாகவும் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

06

### பேருவளையிலிருந்து ஆழ்கடல் சென்ற

## மீனவர்களிடையே கடும் மோதல் நடுக்கடலில் ஒருவர் உயிரிழப்பு



பேருவளையிலிருந்து ஆழ்கடல் மீன்பிடி வள்ளத்தில் கடலுக்குச்சென்ற ஆறு மீனவர்களுக்கிடையே நடுக்கடலில் ஏற்பட்ட மோதலில் ஒரு மீனவர் கொல்லப்பட்டுள்ளார்.

மக்கொன, மாகல்கந்த பகுதியைச் சேர்ந்த எம்.கே. உபுல் சந்தன என்ற மீனவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோதல் சம்பவத்தில் ஏனைய மீனவர்களும் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக

06

### 2024 ஆம் ஆண்டு G.C.E.A/L பரீட்சை

## ஜூலை 10 ஆம் திகதி முதல் Online ஊடாக விண்ணங்கள் ஏற்பு

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை நேற்று முன்தினம் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பின்படி, ஜூலை 10 ஆம் திகதி வரை Online ஊடாக விண்ணப்பிக்க முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic மற்றும் தமது

06

## மலைச்சாரல்

மஹியங்கனை பதுளை பிரதான வீதியில் இடம்பெற்ற

# முச்சக்கர வண்டி விபத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு காயம்

அக்குறணை குறூப் நிருபர்

மஹியங்கனை பதுளை பிரதான வீதியில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் மூன்று பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மாற்றுத்திறனாளிகள்.

காயமடைந்தவர்கள் மீகஹகிவுல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டி ஒன்று 30 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் இவ்வாறு நால்வர் காயமடைந்துள்ளதாக மீகஹகிவுல பொலிஸார் தெரிவிக்கின்றனர். பதுளை மஹியங்கனை பிரதான வீதியின் மீகஹகிவுல பிரதேசத்தில் மேற்படி முச்சக்கரவண்டியை கடையொன்றுக்கு அருகில் நிறுத்தி விட்டு சாரதி சென்றுள்ளார். முச்சக்கரவண்டி சாரதியின்றி இயங்கி வீதியில் முன் நோக்கி நகர்ந்து பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

சுமார் 30 அடி ஆழத்தில் அந்த முச்சக்கர வண்டி விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் இருவர் மாற்றுத்திறனாளிகள் எனத் தெரிய வருகிறது.

# இந்திய அரசாங்கத்திற்கு அமைச்சர் ஜீவன் நன்றி தெரிவிப்பு



இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி ஊடாக மலையக பெருந்தோட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டுள்ள 106 தனி வீடுகளுக்கான நினைவுப் படிகங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் ஆகியோர் திறப்பு விழா செய்து வைத்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் முழுமைப்படுத்தப்பட்ட 106 வீடுகளுக்கான நினைவுப் படிகங்களை இவர்கள் கூட்டாக மெய்நிகர்(Virtual) ஊடாக திறப்பு விழா செய்து வைத்தனர். இந்த நிகழ்வில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து கொண்டு மலையக மக்களுக்கான தேவைப்பாடுகளை எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நிறைவேற்றிவரும் இந்திய அரசாங்கத்திற்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

(ரமேஷ்)

# "வாழ்வதற்கான சம்பளம்" விழிப்புணர்வுக் கூட்டம்

அக்குறணை குறூப் நிருபர்




கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஆதரவுடன் பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் மற்றும் புள்ளி விபரவியல் துறை மேற்கொண்ட "வாழ்வதற்கான சம்பளம்" என்ற ஆய்வின் முடிவுகளை அறிவுறுத்தும் இரண்டாவது விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று முன்தினம்(20) ஹட்டன் நகரில் நடைபெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளி விபரவியல் பிரிவு பேராசிரியர் எஸ் விஜயச்சந்திரன் தலைமையிலான குழு இவ் ஆய்வை மேற்கொண்டிருந்தது.

இவ் ஆய்வின்படி பெருந்தோட்ட தொழிலாளி ஒருவருக்கு 2321ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என அங்கு உரையாற்றிய கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் (ISD) நிறைவேற்று பணிப்பாளர்

பி.முத்துலிங்கம் தெரிவித்தார். இந்த நிலையில் தற்போது அரசு சிபாரிசு செய்துள்ள 1700 ரூபாய் நாளாந்த சம்பளம் வாழ்க்கைக்கு போதியளவான சம்பளம் என்று கூற முடியாது என்றும் அவர் கூறினார்.

மலையகப் பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை மையமாக வைத்து இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக அவர் அதன் போது தெரிவித்தார்.

அரச தகவல் பிரிவு, புள்ளிவபரத் திணைக்களம், வாழ்க்கைச்ண் போன்ற பல்வேறு தரவுகளை வைத்து இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 பேர் கொண்ட ஒரு குடும்ப அலகு என்ற அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டது. பொது வசதிகள், அரசு வழங்கும் மானியங்கள் போன்றவற்றை நீக்கியே இக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் (ISD) நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் தலைமையில் ஹட்டன் அஜந்தா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் தொழிற்சங்க வாதிகள், அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் மற்றும் கல்வி மான்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்ட வெள்ளத்தால் ஆற்றங்கரையோர பயிர்கள் பாதிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

கடந்த சில நாட்களாக இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக இப்பிரதேச ஆற்றங்கரையோரங்களில் செய்கை பண்ணப்பட்ட உணவுப் பயிர்கள் பாதிப்புக்கு உள்ளதாகியுள்ளதாக இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

விசேடமாக தேயிலை, மரக்கறி போன்ற பயிர்ச்செய்கைகள் பாதிப்படைந்துள்ளன.

மழை காரணமாக ஆறுகள், குளங்களில் நிரம்பிய வெள்ளம் வடிந்த பின் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேசத்தில் உள்ள கிளை ஆறுகள் மற்றும் களுங்கை, வளவை கங்கையின் கரையோரங்களில் இந்நிலை நிலவுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

வளவைகங்கை கரைகளின் இருமருங்கிலும் பாரிய குழிகள் ஏற்பட்டு ஆற்றின் கரைகள் விரிவடைந்துள்ளதாகவும் இப்பிரதேசத்தில் ஓடும் பெலிஹுல் ஓயா, ஹிரிக்கட்டு ஓயா, ஹுலுஓயா போன்ற ஆறுகளின் நிலைமையும் இவ்வாறே காணப்படுவதாகவும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும் ஆர்வலர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலைமைகளுக்கு ஆறுகளின் வெள்ளப் பெருக்கு மாத்திரமமன்றி மழையற்ற காலப்பகுதிகளில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, காடழிப்பு போன்ற சட்டவிரோத செயற்பாடுகளும் இவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்களுக்கு காரணமாக அமைவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்த உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளுடன் தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் வலியுறுத்துகின்றனர்.

# ஹட்டனில் கொட்டும் மழையிலும் ஐஸ் கிரிம் தானம்

ஹட்டன் விசேட நிருபர்

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஹட்டன் நகரில் கொட்டும் மழையில் ஐஸ் கிரிம் மற்றும் சர்பத் தானம் வழங்கல் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் மக்கள் வங்கிக்கும் எதிர்ப்புறமாக நேற்று 21 ஆம் திகதி இடம்பெற்றது.


குறித்த தானசாலையினை சிங்கள பாட பழைய மாணவர்கள் இரண்டாம் தடவையாக ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்த ஐஸ் கிரிம் மற்றும் சர்பத் தானத்தில் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

"உறுமய" நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்

# வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உதயமான காணி உரிமை அற்றவர்களுக்கு, காணி உறுதிகளை வழங்கும் "உறுமய" நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (20) வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது "உறுமய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணி உறுதிகளை வழங்கும் செயற்பாட்டில் உள்ள நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குவது குறித்து ஆளுனர் நஸீர் அஹமட், இதன்போது தீவிர கவனம் செலுத்தினார்.

"உறுமய" காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பிரதேச மட்டத்தில் நடமாடும் சேவைகளை நடத்தி, உரிய பயனாளிகளை தெரிவு செய்து, அவர்களுக்கான காணி உறுதி வழங்கும் செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்குமாறு ஆளுநர் நஸீர் அஹமட் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் தற்போது "உறுமய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் குறித்த பட்டியலையும், குறைபாடுகள் கொண்ட விண்ணப்பங்கள் குறித்து இன்னொரு பட்டியலையும் தயார் செய்யுமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது "உறுமய" காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணி உறுதிகளை பரீட்சித்தல், அவற்றின் நகல் பிரதிகளை கணினி மயப்படுத்தல், உரிய இடங்களுக்கு இணையத்தளம் ஊடாக அனுப்பி வைத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு ஆளணி வளப் பற்றாக்குறை இருப்பதாக பிரதேச செயலாளர்கள் பலரும் சுட்டிக்காட்டினர். உடனடியாக செயற்பட்ட ஆளுநர், வடமேல் மாகாண சபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் கணனி பயிற்சிகளை நிறைவு செய்துள்ளோரை நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் தற்காலிகமாக சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான அனுமதியை வழங்கினார்.

அதன் மூலம் சகல பிரதேச செயலகங்களுக்கும் தகுதி வாய்ந்த பயிலுனர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

மேலும், பிரதேச செயலாளர்கள் காணி உறுதி வழங்குதல் தொடர்பான புள்ளிவிபரங்களை வழங்குவதை விட, அவற்றை நிறைவேற்றிய பின்னர் அதுதொடர்பான விபரங்களை வழங்குவதையே தான் விரும்புவதாக ஆளுநர் நஸீர் அஹமட் வலியுறுத்தினார்.

# மையவாடி வீதி பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் புனரமைப்பு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ரத்மல்யாய கிராமத்தின் முஸ்லிம் மையவாடிக்குச் செல்லும் வீதி, பிரதேச இளைஞர் குழுக்கள், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடன் பள்ளங்கள் நிரப்பப்பட்டு, கொங்றீட் இடப்பட்டு மக்களின் பாவனைக்கு ஏற்றதாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக இவ்வீதி வெள்ள அனர்த்தம் காரணமாக மதகுகள் உடைந்து பயணம் செய்வதற்கு சிரமமான நிலையில் காணப்பட்டது.

## நகர்வலம்

# புத்தளம் சமீரகம கிராம மையவாடிக்கு அருகே இளம் பெண் சடலமாக மீட்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளம் மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமீரகம கிராம மையவாடிக்கு அருகில் உள்ள வீதியில் இருந்து இளம் பெண்ணின் சடலமொன்று நேற்று(21) காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சமீரகம பகுதியில் உள்ள தென்னந் தோட்டமொன்றில் வசித்து வந்த இராமையா ஜெயந்தி (வயது 26) எனும் ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மதுரங்குளி பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நேற்று (21) அதிகாலை 3.30 அளவில் வீட்டிலிருந்து வெளியேறிய அந்தப் பெண், மீண்டும் வீடு திரும்பாததை அடுத்து, கணவர் பொலிஸாருடம் முறையிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே குறித்த பெண் வசித்த தோட்டத்துக்கு முன்னால் உள்ள வீதியில் காணப்பட்ட வெள்ளநீருக்குள் வீழ்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளம் பெண்ணுக்கு அடிக்கடி வலிப்பு நோய் ஏற்படுவதாக குடும்பத்தாரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

அத்துடன், சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மரண விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், சடலத்தை பிரேத பிரசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கிராமிய மட்டத்தில் நவீன தொழில்நுட்பத்துடனான விவசாயத்துறையை இளைஞர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் வகையில் விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அனுராதபுரம் எப்பாவள பகுதியில் இராஜாங்க அமைச்சர் டி.பி .ஹேரத் தலைமையில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் விவசாய உபகரணம் வழங்கிய போது பிடித்த படம்.

படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

# பொசன் தினத்தை முன்னிட்டு நாச்சியாதீவில் வாகனங்களை கழுவும் முன்மாதிரி நிகழ்வு

திறப்பனை தினகரன் நிருபர்



பொசன் போயா தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் வந்த பக்தர்களின் முச்சக்கர வண்டிகள், கார்கள், மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றை அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து இலவசமாக கழுவிச் சுத்தம் செய்து கொடுத்த முன்மாதிரி நிகழ்வொன்று அநுராதபுரம் சிராவஸ்திபுரவில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இவ்வாறு அநுராதபுரம் நோக்கி வந்த பக்தர்களின் வாகனங்களை கழுவி சுத்தம் செய்து கொடுத்த ஆசிரியர்களின் பணியை பாராட்டி ஏராளமான பக்தர்கள் மனமிரங்கி இவர்களுக்கு பரிசில்கள் வழங்கினர்.

இந் நிகழ்வில் நாச்சியாதீவு பிரதேச செயலகத்தின் ஆரம்ப பிள்ளைப் பராய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ருவந்தி ஜயசூரிய உட்பட நாச்சியாதீவு பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் சுமார் 45 ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# சூழல் சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இலங்கை உறுதி

## காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கவும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் வெளிநாட்டு நிதிக்காகக் காத்திருப்பதில் அர்த்தமில்லை. 1st WLI Asia Oceania Conference 2024 உச்சி மாநாட்டின் நிறைவு நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் சூழல் சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக வெளிநாட்டு நிதிக்காக காத்திருப்பதில் பயனில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வெப்பமண்டல நாடுகள் சுற்றாடல் தொடர்பான வர்த்தகத் திட்டங்களில் கவனம் செலுத்தி தமக்குத் தேவையான நிதியை பெற்றுக்கொள்ள செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (20) பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்ற 'WLI Asia Oceania Conference 2024' நிறைவு விழாவில் கலந்துகொண்டு இதனை குறிப்பிட்டார்.




சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு ஜூன் 17 முதல் 21 வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் நடைபெற்றது.

"சூழல்நேய சுற்றுலாத் துறைக்கான சதுப்பு நிலங்கள் மற்றும் சதுப்பு நில மையங்கள்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், கொரியா, மொங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியன்மார், நியூசிலாந்து, ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா, தாய்வான், ஐக்கிய இராச்சியம் ஆகிய 15 நாடுகளில் உள்ள 70 இற்கும் மேற்பட்ட சதுப்பு நிலப்

06

## இலங்கை இராணுவத்தின் புதிய பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் ரோஹித அலுவிஹார நியமனம்

ஸாதிக் ஷிஹான்



இலங்கை இராணுவத்தின் புதிய பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் ரோஹித அலுவிஹார நியமிக்கப்பட்டுள்ளார்.

2024 ஜூன் மாதம் 20ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தில் 35 வருடங்களுக்கும் மேலாக சிறப்பான முறையில் பணியாற்றிவரும் மேஜர் ஜெனரல் ரோஹித அலுவிஹார, இலங்கை இராணுவத்தில் அட்ஜுடண்ட் ஜெனரல் மற்றும் பாதுகாப்பு படைத் தளபதி (மத்திய) உட்பட பல முக்கிய நியமனங்களை வகித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் அலுவிஹார விஜயபாகு காலாட்படை படைப்பிரிவின் (கேர்ணல் ஒப் த ரெஜிமன்ட்) பொறுப்பதிகாரியாகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அனுராதபுரத்தில் பொசன் பௌர்ணமி; பாதுகாப்பு அமைச்சு விசேட வழிபாடு



பாதுகாப்பு அமைச்சு பொசன் தினத்தை முன்னிட்டு, அனுராதபுரத்தில் பல்வேறு விசேட நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படையினரை நினைவு கூர்தல், அவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல், நாட்டைக் காக்கப் போராடி இயலா நிலையிலுள்ள வீரர்கள் விரைவில் குணமடையவும் நாட்டு மக்களுக்கும் நல்லாசி வேண்டி பிரார்த்தனைகள் முதலான விசேட வழிபாட்டு நிகழ்வுகள் வரலாற்று சிறப்புமிக்க அனுராதபுர சந்தஹிரு மஹா சயவில் நேற்று (21) நடைபெற்றன.

பாதுகாப்புச் செயலாளர் நாயகம் கமல் குணரத்னவின் வழிகாட்டலில், பாதுகாப்பு அமைச்சின் பங்களிப்புடன், முப்படையினர், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## காரை இந்து கொழும்பு பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம்

காரைநகர் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 2024 இற்கான ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை 23.06.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு சங்க தலைவர் சி. நேசேந்திரம் தலைமையில் வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் உள்ள கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறும். நிகழ்விற்கு தவறாது வருகை தருமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் ஆறுமுகம் சிவசோதி கொழும்பில் உள்ள பழைய மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்

## ஐந்து மாத காலத்துக்குள் 2,155 மோசடிகள் பதிவு

### SLBFE புலனாய்வுப் பிரிவு தகவல்

2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பாக 2,155 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை 11 சட்டவிரோத வேலைவாய்ப்பு நிறுவனங்கள் சுற்றி வளைப்பட்டுள்ளதுடன், 65 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறான மோசடிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக ஹாலி எல, இரத்தினபுரி, தங்காலை, குருணாகல் மற்றும் கண்டி அலுவலகங்களிலும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதாக பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் பணியகத்தின் விசேட விசாரணை பிரிவின் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை

## 2024 முதல் அரையாண்டில் ஒரு மில்லியனை கடக்கும்

இலங்கைக்கான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை, முதல் அரையாண்டு காலப்பகுதியில் ஒரு மில்லியனை கடக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் முதல் 19 நாட்களில் 69,825 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 966,825 சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

## கொழும்பில் மரங்களின் நிலத்தடி தன்மையை ஆராயத் தீர்மானம்

கொழும்பில் மரங்களின் நிலத்தடி தன்மை, மரங்களின் வேர்கள் மற்றும் என்பன தொடர்பில், புதிய ஆய்வொன்றை நடத்தவுள்ளதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையினால் கொழும்பில் அண்மைக்காலமாக முறிந்து வீழ்ந்த பெரும்பாலான மரங்கள், முறிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருந்திருக்கவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நகரில் மாத்திரம் 500 மரங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றில் 200 பழமையான மரங்கள் முறிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது. இதுவரையான காலப்பகுதியில் அவற்றில் 160 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

ஏனைய ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. குழாய் நீர் பொருத்துதல் மற்றும் ஏனைய பணிகளின் போது மரங்களின் வேர்கள் பாதிக்கப்படும் என்பதால் அவை குறித்து அவதானம் செலுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் உதவியுடன் அதற்கான ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கு அதி நவீன தொழில்நுட்பக் கருவிகளும் தேவைப்படுவதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் மாத்தளை மாவட்டத்திற்கு விஜயம்

மாத்தளை மாவட்டத்திற்கான நேரடி விஜயம் மேற்கொண்ட நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மத வழிபாடுகள் உட்பட பாடசாலைகளுக்கான கள விஜயங்களையும் மேற்கொண்டார். இதன்போது மாத்தளை நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திற்கு சென்று அங்கு பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார். இதேவேளை ஆலய நிர்வாக சபையினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

குறிப்பாக ஆலயத்திற்கான அறநெறிக் கல்வியை முன்னெடுத்துச்செல்வதற்கு குறைபாடாகக் காணப்பட்ட கட்டிட வசதிகளை தனது அமைச்சினூடாக நெறிப்படுத்தி தருவதாக நிர்வாக சபையினரிடம் தெரிவித்தார். அத்துடன் ஆலய நினைவுப் புத்தகத்தில் தனது கருத்து பதிவினையும் பதிவிட்டார்.



தொடர்ந்து மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட மாத்தளை இந்துக் கல்லூரி, பாக்கியம் தேசிய கல்லூரி, கந்தேநுவர தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கான விஜயங்களையும் மேற்கொண்டார்.

இதில் மாத்தளை இந்துக் கல்லூரி மாணவர்களின் நீண்டகால தேவையாக இருந்து வந்த ஒன்றுகூடல் கட்டிடம் அமைப்பதற்காக தனது அமைச்சு நிதியிலிருந்து நேரடியாக 05 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாக ஆசிரியர், மாணவர்களிடம் தெரிவித்தார். பாக்கியம் தேசிய கல்லூரியின் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன் முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் ஆரம்பித்துவைத்த பாடசாலை ஒன்றுகூடல் பிரதான மண்டப நிறைவு பணிகளுக்கான 130 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், கட்டிட பணிகளை விரைவாக முன்னெடுத்து பூர்த்திசெய் பாடசாலையின் பயண்பாட்டிற்கு கையளிக்குமாறு பணிப்புரைவிடுத்தார். அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினரால் அமைச்சருக்கு நினைப்பரிசு வழங்கி வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மூன்றாவதாக கந்தேநுவர தமிழ் மகா வித்தியாலயத்திற்கும் சென்றிருந்த அமைச்சர் பாடசாலை சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினரின் வேண்டுகோளிற்கு இணங்க திறன் வகுப்பறையினை தான் பெற்றுத்தருவதாகவும், இதனை இலங்கை இந்திய சமுதாய பேரவையின் பங்களிப்பினூடாக பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார்.

## இலங்கை - இந்திய கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும்

### மணவை அசோகன் வேண்டுகோள்

தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் விரைவில் கப்பல் பயணிகள் போக்குவரத்து தொடங்கவுள்ளதாக பத்திரிகை செய்திகள் தான் வந்த வண்ணம் உள்ளன.

இரு நாட்டு அரசும் அதற்கு செயல்வடிவம் கொடுப்பதாக தெரியவில்லை.

விரைவில் கப்பல் போக்குவரத்து தொடங்கி இரு நாட்டு மக்களையும் மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டும்.

வசதி படைத்தோர் இரு நாட்டு விமானங்களில் பயணித்து தனக்குண்டான காரியங்களைச் செய்து முடிக்கின்றனர். வசதியற்றோர் இலங்கையையும் இந்தியாவையும் கனவில் தான் காண்கிறார்கள்.

இரு நாட்டில் வசிக்கும் உறவினர்கள் பல தலைமுறைகளாக சந்திக்காமல் உள்ளனர்.

அவர்களை இணைக்க வேண்டும். இரு நாட்டு புன்னிய ஸ்தலங்களையும் மக்கள் காண வேண்டும். அதற்கு இலங்கை தலைவர்களும் இந்திய தலைவர்களும் இணங்க வேண்டும்.

இலங்கை இந்திய இரு நாட்டு மக்களும் மகிழ்ச்சியுற இருநாட்டு அரசும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.



கொழும்பு விவேகானந்தா சபையில் அண்மையில் நடைபெற்ற பன்னிரு திருமுறை விழாவில் முற்றோதலில் பங்குபற்றிய 21 ஓதுவார்கள் தலைவர் கலாநிதி ராஜ் மோகன் , பொது செயலாளர் சி சண்முகநாதன், பொருளாளர் வை. பாஸ்கர் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டனர். படத்தில் கலந்து கொண்ட ஓதுவார்களையும் சான்றிதழ் பெற்றுக்கொண்டோரையும் காணலாம்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 08ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 15


### குறள் தரும் சிந்தனை



ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு

ஒரு பொருள் பெற்று நூறு மடங்கு பொருளை இழந்து விடும் சூதாடிகளுக்கும், நன்மை பெற்று வாழும் ஒரு வழி உண்டோ?

# எலிக்காய்ச்சல் தீவிரமடைவதால் விழிப்புணர்வு மிகவும் அவசியம்!

இலங்கை நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள நாடான போதிலும், மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து சில நோய்கள் தலைதூக்குவது வழமையாகும். அவற்றில் எலிக்காய்ச்சலும் ஒன்றாகும்.

அந்த வகையில் கடந்த இரண்டொரு வாரங்களுக்கு முன்னர் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ள நிலை காரணமாக தற்போது எலிக்காய்ச்சலுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக சேறு சகதியுடன் கூடிய விவசாய நடவடிக்கைகள் இடம்பெறும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இக்காய்ச்சலின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர். இலங்கையில் குறிப்பாக இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, குருநாகல், காலி, மாத்தறை உள்ளிட்ட மாவட்டங்களின் பல பிரதேசங்களில் இக்காய்ச்சலுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்படுவது வழமையாகும்.

அந்த வகையில் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் ஐயாயிரம் பேர் இக்காய்ச்சலுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் மருத்துவ நிபுணர் துஷானி தபரேரா, கடந்த வருடம் இந்நோய்க்கு உள்ளானவர்களாக 9 ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டனர் என்று தெரிவித்தார்.

இவரது தரவுகளின்படி, கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் இந்நோய்க்கு உள்ளாகக் கூடியவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க முடியும் என்பது தெளிவாகிறது. கடந்த வருடத்தின் 12 மாதங்களிலும் ஒன்பதாயிரம் பேர்தான் இந்நோய்க்கு உள்ளானவர்களாக பதிவாகியுள்ளனர். ஆனால் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் இந்நோய்க்கு உள்ளானவர்களாக ஐயாயிரம் பேர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். ஆகவே இவ்வருடம் இன்னும் ஆறு மாதங்கள் எஞ்சியுள்ளன. அதுவும் நாட்டுக்கு மழைவீழ்ச்சி அதிகம் கிடைக்கப் பெறக்கூடிய காலப்பகுதியாகும்.

அதனால் எலிக்காய்ச்சல் அச்சுறுத்தலைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதனை ஒவ்வொரு பிரஜையும் தம் பொறுப்பாக கருதி செயற்படுவது மிகவும் அவசியமானது.

எலிக்காய்ச்சலானது முற்றிலும் தவிர்ந்துக் கொள்ளக்கூடிய நோய் மாத்திரமல்லாமல் முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளக்கூடிய நோயும் ஆகும். அதேநேரம் இந்நோய் குறித்து கவனயீனமாகவோ அலட்சியமாகவோ நடந்து கொண்டால் அது உயிராபத்தைக்கூட விளைவித்திட முடியும்.

அதனால் தற்போதைய சூழலில் இந்நோய் குறித்து விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது அவசியம்.

பொதுவாக எலிக்காய்ச்சலின் மூல காரணியாக லெப்டோபைரோசிஸ் என்ற பக்றீரியா விளங்குகிறது. இந்த பக்றீரியா எலிகளின் சிறுநீரகத்திலும் சிறுநீரிலும் அதிகம் காணப்படக்கூடியதாகும். அதேநேரம் நாய், பூனை போன்ற வீட்டு வளர்ப்பு பிராணிகளிலும், குரங்கிலும் கூட இந்த பக்றீரியா காணப்படவே செய்கிறது. ஆனாலும் எலிகளின் சிறுநீர் ஊடாக இப்பக்றீரியா அதிகம் வெளியாகக் கூடியதாக இருப்பதால் எலிக்காய்ச்சல் எனப்படுகின்றது.

எலி உள்ளிட்ட உயிரினங்களின சிறுநீர் ஊடாக வெளிப்படும் இந்த பக்றீரியா சேறு சகதி மிக்க பிரதேசங்களில் காணப்பட முடியும். அவை மழையுடன் சேர்த்து செயற்பாட்டு நிலையை அடையும். அந்த சமயத்தில் முற்பாதுகாப்பு ஏற்பாடுகள் அற்ற முறையில் சேறு சகதி மிக்க இடங்களில் வேலைகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடும் போது சுகதேகிகளை இந்த பக்றீரியா தொற்றிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக கை, கால்களில் சிராய்ப்பு காயங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு இப்பக்றீரியா தொற்று அச்சுறுத்தல் மிக அதிகமாகும். அத்தோடு வயல், குளம் ஒடைகளில் தேங்கிக் கிடக்கும் நீரில் வாய் கொப்பளிப்பவர்களும் முகம் கழுவுபவர்களும் இந்நோய்த்தொற்று அச்சுறுத்தலை பெரிதும் எதிர்கொள்கின்றனர்.

அதனால் ஒருவருக்கு எலிக்காய்ச்சல் மூலகாரணியின் தொற்று ஏற்பட்டு விட்டால் அவருக்கு கடும் காய்ச்சல், தலைவலி, தசைவலி, இருமல், கண்கள் மஞ்சளாதல் போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படலாம்.

ஆகவே தற்போதைய சூழலில் காய்ச்சலைப் பிரதான அறிகுறியாகக் கொண்ட நோய் நிலைக்கு எவராவது உள்ளானால் தகுதியான மருத்துவரை அணுகி உரிய ஆலோசனைகளுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக நோய்களை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். இதைவிடுத்து காய்ச்சல் அறிகுறி காணப்பட்டும் கவனயீமாகவும், அசிரத்தையுடனும் நடந்து கொள்வது அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாகவே இருக்கும். இவற்றை கருத்தில் கொண்டு செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# சர்வதேச யோகா தினம் நேற்று உலகநாடுகளில் அனுஷ்டிப்பு

சர்வதேச 10 ஆவது யோகா தின நிகழ்ச்சிகள் நேற்றுக் காலை உலகநாடுகள் பலவற்றில் நடைபெற்றன. இந்தியாவில் யோகா தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. மாநிலங்களின் ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், இராணுவ தளபதிகள் உள்ளிட்டோர் சர்வதேச யோகா தின நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

உலக அளவில் ஆண்டுதோறும் ஜுன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குடன் கூடிய இந்தப் பிரகடனம், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 69 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி 10 ஆவது சர்வதேச யோகா தினம் இம்முறை கொண்டாடப்பட்டது.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு டெல்லி உட்பட இந்தியாவின் பல பகுதிகளில் நேற்றுக்காலை சிறப்பு யோகா நிகழ்வுகள் நடத்தப்பட்டன. டெல்லியில் மத்திய அமைச்சர்கள் பிரகலாத் ஜோஷி, பிஎல் வர்மா, இராணுவ தளபதி உபேந்திரா திவேதி, கடற்படை தளபதி தினேஷ் கே திரிபாதி உள்ளிட்டோர் யோகா நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

லடாக்கின் லே பகுதியில் இராணுவ வீரர்கள் நேற்றுக்காலை யோகா நிகழ்வுகளில் பங்கேற்றனர். உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்வாரில், யோகா குரு பாபா ராம்தேவ் தலைமையில்



யோகா நிகழ்வுகள் நடைபெற்றன. மேற்கு வங்க மாநிலத்தில் எல்லைப் பாதுகாப்புப்படை வீரர்கள் யோகா நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் டைம்ஸ் சதுக்கத்திலும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்றனர். கோவையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான ஆர்வமிக்க மற்றும் துடிப்பான இளைஞர்களுடன் சேர்ந்து முழு ஆரோக்கியம் மற்றும் உலகளாவிய நல்வாழ்வுக்கான யோகா பயிற்சி செய்தார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் தலைநகர் ஶ்ரீநகரில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று யோகாசனங்களை மேற்கொண்டார்.

# அஷ் ஷெய்க் முஸ்தபா நாயகம் (றஹ்) ஞாபகார்த்த தினம் இன்று அனுஷ்டிப்பு



ஆன்மீக ஞானியும் காதிரியதுன் நபவீய்யா தரீக்காவின் ஸ்தாபகருமான சங்கைக்குரிய அஷ் ஷெய்க் முஸ்தபா நாயகம் (றஹ்) அவர்களின் ஞாபகார்த்த தினம் இத்தரீக்காவைப்பின்பற்றும் நாட்டிலுள்ள 18 ஊர்களில் இன்று 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அரபு – தமிழ் யுக புருஷர் என்று போற்றப்படும் அவரது ஞாபகார்த்த கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் இன்று 22 ஆம் திகதி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புகாரித் தக்கியாவில் இஷாத் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெறுகிறது.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் அல் ஆலிமுல் பாழிழ் வஷ் செய்ஹு காமில் சங்கைக்குரிய நாயகம் அஷ் ஷெய்க் அஹமத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி இந்த மஜ்லிஸுக்கு தலைமை வகிப்பார்.

பேருவளை நகரில் மூத்த குடியில் ஆதம் மரைக்காரின் புதல்வரான சங்கைக்குரிய மாகாண் சேகு முஸ்தபா வலியுல்லாஹ் பிறந்தார். அன்னார் இஸ்லாமிய சட்ட திட்டங்கள் அரபு இலக்கண, இலக்கிய, பிக்ஹு சட்டதிட்டங்கள் போன்ற இஸ்லாமிய மத அறிவியல் துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இந்தியாவில் உள்ள காயல் பட்டணத்தில் இத்துறையில அறிவு பெற்று நாடு திரும்பி பேருவளை மாளிகாசேனை பைத்துல் முபாரக் முஸ்தபவியா புகாரித் தக்கியாவை தனது தலைமை ஸ்தானமாகவும், ஆய்வு கூடமாகவும் அமைத்து இஸ்லாமிய பணிபுரியும் காலத்தில் சங்கைக்குரிய முபாரக் மௌலானா என்ற பெரியாரின் சகவாசம் கிடைத்தது.

சங்கைக்குறிய செய்கு முஸ்தபா (றஹ்) அவர்களின் சேவைக்கு இவர்கள் துணை புரிந்து சிறிது காலத்தில் முபாரக் மௌலானா தென்னிலங்கையில் காலி நகரில் இறையடி சேரவே தென் அரேபியர் யெமன் நாட்டைச் சேர்ந்த அஹ்தலி மௌலானா அவர்களின் சகவாசம் கிடைத்து பேருவளை மாளிகாச்சேனை புஹாரித் தக்கியாவில் புஹாரி மஜ்லிஸ் ஆரம்பம் செய்யும் பாக்கியம் கிடைத்தது.

சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள் மெய்ஞானியாகவும் புலவராகவும் திகழ்ந்தார். அன்னவரினால் இயற்றப்பட்ட மீசான் மாலை அரபுத்தமிழ் கவிதை புகழ் பெற்றதாகவுள்ளது. அவர் பல இஸ்லாமிய பத்வா நூல்கள், இஸ்லாமிய சட்ட திட்டங்கள், முனாஜாத்துக்கள் போன்றவற்றை அரபியிலும், அரபுத்தமிழிலும் வெளியிட்டார்கள். அஹ்காமுல் இகம் என்ற பெயரில் அரபுத் தமிழ் அச்சுக்கூடத்தை நிறுவி அதன் மூலம் அபுத் தமிழில் பல ஆக்கங்களை வெளியிட்டார்.

அவர் ஹஜ் கடமைக்காக புனித மக்கா சென்ற போது மக்காவில் காலமாகி அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டார். மக்கா மதீனா போன்ற முஸ்லிம் நாடுகளில் சேகு முஸ்தபா (றஹ்) அவர்களின் சன்மார்க்க அறிவுத் திறன் பலராலும் புகழப்பட்டது.

அன்னாரின் ஞாபகர்த்தமாக ஒவ்வவொரு வருடமும் பேருவளை மாளிகாசேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புகாரித்தக்கியாவில் கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் நடத்தப்படுகிறது.

**பேருவளை பீ.எம்.முக்தார்...**

# சட்டவிரோத மதுபானம் அருந்தி பலியானோரின் எண்ணிக்கை ஐம்பதையும் தாண்டியது!



தமிழ்நாடு கள்ளக்குறிச்சியில் மெதனோல் கலந்த சட்டவிரோத மதுபானத்தை அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று 50 ஐயும் தாண்டி விட்டது. மரணங்கள் மேலும் அதிகரித்து வருகின்றன. சட்டவிரோத மதுபானத்தை அருந்தியவர்களில் மேலும் 108 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இச்சம்பவத்தினால் கள்ளக்குறிச்சி நகராட்சி பிரதேசம் முழுவதும் மக்கள் வேதனையில் இருக்கிறார்கள்.

சட்டவிரோத மதுபான பலி எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருவதால் தமிழக மாநிலம் முழுதும் பெரும் அதிர்வலை ஏற்பட்டுள்ளது. அரசியல் கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் கள்ளக்குறிச்சிக்கு வந்து சென்ற வண்ணம் இருக்கிறார்கள். கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்களின் உடல்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு வந்தவண்ணமுள்ளன.

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்துக்கு மிக அருகில் உள்ளது கருணாபுரம் பகுதி. கள்ளக்குறிச்சி நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி பொலிஸ் நிலையம், மற்றும் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையம் ஆகிய முக்கிய அலுவலகங்கள் இப்பகுதிக்கு 100 மீட்டர் அருகில்தான் உள்ளன. இந்தப் பிரதான அலுவலங்களைத் தாண்டித்தான் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டும்.

50 இற்றும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளதால் தெருவெங்கும் அழுகுரல்கள் கேட்கின்றன. அருகருகே போடப்பட்டிருந்த பந்தல்கள், வாசலிலேயே பிரேதபெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த உடல்கள். அவற்றைச் சுற்றி நின்று அழும் உறவினர்கள் ஒருபுறமும், துக்கம் விசாரிக்க வருபவர்கள் ஒருபுறமுமாக கள்ளக்குறிச்சி பிரதேசம் துயரத்தில் மூழ்கியுள்ளது.

## கள்ளக்குறிச்சி உயிரிழப்புகளால் தமிழகம் எங்கும் சோகமயம்!





சிலர் எந்த வீட்டிற்குச் செல்வது, எத்தனை மாலைகள் வாங்கிச் செல்வது என்று திண்டாடுவதையும் காண முடிகின்றது.

கருணாபுரம் பகுதியில் தந்தை, தாய் இருவருமே மரணமடைந்துள்ளதால் அவர்களது பிள்ளைகள் அநாதரவாகியுள்ளனர்.

பறையொலி சத்தங்களை விட அழுகுரல் சத்தம்தான் அதிகமாக கேட்கின்றது. மாவட்டம் முழுவதும் கேட்கும் மரண ஓலம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

சட்டவிரோத மதுபானத்தை அருந்தியவுடன் வயிற்றுப்போக்கு, கை, கால் மரத்துப் போதல், காய்ச்சல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதையடுத்து பாதிப்பின் தீவிரத்தை உணர்ந்த மக்கள் சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சியில் இருக்கும் அரசு மருத்துவமனையில் குவிந்திருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு அதீத பாதிப்பு இருப்பது மருத்துவர்கள் மேற்கொண்ட சோதனையின் மூலம் தெரியவந்தது.

இதையடுத்து அவர்கள் மேல்சிகிச்சைக்காக சேலம், புதுச்சேரி ஜிம்பர் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். உயிரிழந்த 50 இற்கும் மேற்பட்டோரைத் தவிர, 70 இற்கும் மேற்பட்டோர் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்கள். பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

கள்ளக்குறிச்சிச் கருணாபுரம் கோமுகி ஆற்றங்கரையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த கன்னுக்குட்டி என்கிற கோவிந்தராஜ் (49), அவரது மனைவி விஜயா (42), கோவிந்தராஜின் சகோதரர் தாமோதரன் (40) ஆகிய மூவரும் கள்ளச்சாராயம் விற்பனை செய்து வந்துள்ளனர். இங்குதான் அப்பகுதி மக்கள் கள்ளச்சாராயம் வாக்கி குடித்து இருக்கிறார்கள்.

மொத்தமாக 109 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். உயிரிழந்தவர்களில் 5 பேர் பெண்கள் ஆவர். முன்னதாக கள்ளச்சாராயம் குடித்து இறந்தவர்களின் இறுதிச் சடங்குக்கு சென்ற இடத்திலும் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அதையும் சிலர் வாங்கி குடித்திருக்கிறார்கள். உடனேயே அவர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை பொலிஸார் நடத்திய சோதனையில் 1100 லீட்டர் சட்டவிரோத மதுபானம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இந்த விவகாரத்தில் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் 10 இற்கும் மேற்பட்டோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதையடுத்து மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் சமய்சிங் மீனா பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல் மதுவிலக்கு அமுலாக்கப் பிரிவு பொலிஸ்துறை துணை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன், ஆய்வாளர் கவிதா, திருக்கோவிலூர் மதுவிலக்கு அமுலாக்க பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் பாண்டிசெல்வி மற்றும் உதவி ஆய்வாளர் பாரதி, கள்ளக்குறிச்சி பொலிஸ் ஆய்வாளர் ஆனந்தன் மற்றும் உதவி ஆய்வாளர் சிவசந்திரன், பொலிஸ் நிலைய எழுத்தர் பாஸ்கரன், சிறப்பு உதவி ஆய்வாளர் மனோஜ் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்களிடம் விசாரித்ததில், அவர்கள் அனைவரும் மெதனோல் என்னும் திரவத்தை அருந்தியிருப்பது கண்டறியப்பட்டது. மெதனோல் கொண்டு வந்த விற்பனை செய்த கன்னுக்குட்டி என்னும் கோவிந்தராஜ், அவரது தம்பி தாமோதரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது பொலிஸ்துறையின் கவனக்குறைவால் நடந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு, தண்டனை கிடைக்க வழிவகை செய்யப்படும். யாருக்கும் அரசு பரிவு காட்டாது என மாநில அரசு தெரிவித்துள்ளது.

# பரோட்டா உண்ட 6 மாடுகள் மரணம்!

பரோட்டா சாப்பிட்டு அஜீரண கோளாறால் மனிதர்கள் இறக்கும் செய்திகள்தான் அடிக்கடி வரும். ஆனால் கேரளாவில் பரோட்டா சாப்பிட்டு 6 மாடுகள் இறந்துள்ள சோக செய்தி கால்நடை வளர்ப்போர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம், கொல்லம் மாவட்டம், வெளிநல்லூர் பகுதியைச் சேந்தவர் ஹஸ்புல்லா. இவர் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு, ஊருக்கு வந்து மாட்டுப் பண்ணை வைத்துள்ளார். அவர், தன் மாட்டுப்பண்ணையில் 30 பசுக்களையும், 2 எருமைகளையும், 2 காளை மாடுகளையும் வளர்த்து வந்துள்ளார்.

அவர் சில தினங்களுக்கு முன்னர் பரோட்டாவுடன், பலாப்பழங்கள், பயறு வகைகள், கோதுமை தவிடு என்று பண்ணையில் உள்ள மாடுகளுக்கு உணவாக கொடுத்துள்ளார். இதையடுத்து மறுநாள் பசுக்களுக்கு மூச்சுவிட முடியாத அளவுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

உடனே கால்நடை மருத்துவர்களை அழைத்து மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் அடுத்தடுத்த நாள்களில் வரிசையாக 6 மாடுகள் இறந்துள்ளன. மேலும், பரோட்டா சாப்பிட்ட 8 மாடுகளுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மாடுகள் இறப்பால் சுமார் நாலரை இலட்சம் ரூபா விவசாயிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பரோட்டாவை அதிக அளவில் சாப்பிட்டதால் தான் மாடுகள் இறந்துள்ளன என தெரிவித்த மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் 'பரோட்டாவை எக்காரணம் கொண்டும் மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கக்கூடாது' என எச்சரித்துள்ளனர்.

பழங்கள், அரிசிக் கஞ்சி ஆகியவற்றை அதிக அளவில் உணவாகக் கொடுத்தால் மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு அஜீரணம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு மரணமடையும் நிலை ஏற்படும். எனவே மாடுகள் வளர்க்கும் விவசாயிகள் மனிதர்கள் சாப்பிடும் உணவை கொடுக்கும்போது கவனமாக இருக்க வேண்டும் என கொல்லம் மாவட்ட கால்நடை நல அலுவலர் டொக்டர் ஷைன் குமார் தெரிவித்துள்ளார்.

மாடுகள் இறந்த சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பண்ணைக்கு கேரளா மாநில கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் சிஞ்சு ராணி நேரில் சென்று ஆய்வு செய்தார்.



# தமிழும் சைவமும் வளர்த்த பெருந்தகை 'வானொலி மாமா'



## நா. மகேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று

சிட்னியில் தமிழும் சைவமும் வளர்த்த 'வானொலி மாமா' புகழ் நா. மகேசன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுதினம் (ஜூன் 22) இன்றாகும்.

இலங்கையில் சிறுவயதில் நாம் வானொலியின் ஊடாக கேட்டு இரசித்த குரல், ஆற்றலும் அறிவும் கொண்ட அரிய ஆசானாக விளங்கியவர். சிறுவயதிலேயே இலங்கை வானொலியில் அவரால் தொகுத்து வழங்கப்படும் 'சிறுவர் நிகழ்ச்சியை' எம்மால் ரசித்து அனுபவித்த நிகழ்வு இன்னமும் பலருக்கு நினைவிருக்கும்.

இலங்கை வானொலியில் 'சிறுவர் மலர்' என்ற 45நிமிட நேர நிகழ்ச்சி மூலம் 1965 முதல் தனது கலைப்பணியை ஆரம்பித்து, 1981 வரை அவர் இடைவிடாது நடத்தி வந்தார். இதனால் இவர் 'வானொலி மாமா' என சிறுவர்களாலும் பெரியவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டார். சிறுவர் மலர் நிகழ்ச்சியில், சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதியும், நெறிப்படுத்தியும் வந்த 'வானொலி மாமா' புகழ் நா. மகேசன் கடந்த வருடம் ஜூன் 22 ஆம் திகதி சிட்னியில் காலமானார்.

இலங்கையின் சிறுவர் இலக்கிய வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்கும் மூத்ததலைமுறையினருக்கு இவரை நன்கு தெரியும். சமகாலத்தின் இளம் தலைமுறையினர் கூட இவரை நன்கு அறிந்திருப்பார்கள்

இவரது இயற்பெயர் நாகலிங்கம் மகேசன். அக்கால பாடசாலை மாணவர்கள் இவரை வானொலி மாமா என்றே அழைத்தனர். சிறந்த முறையில் சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்தி வந்தவர்.

பிள்ளைக் கவியரசு அழ. வள்ளியப்பா போன்ற அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர், சிட்னியில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தவர்.

தமிழும் சைவமும் கண்ணென வாழ்ந்த வானொலி மாமா யாழ் மண் பெற்ற சிறந்த கல்விமான். சிட்னி சைவமன்றக் காவலர், கலைஞர், பழந்தமிழ் இலக்கிய விற்பன்னரும் கூட. அவுஸ்ரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த பல ஆண்டுகள் அரிய நிகழ்சிகளை நடத்திய அறிஞர் நா.மகேசன் அவர்களாவார்.

வானொலி மாமா தமிழுக்கும், சிட்னி தமிழ் சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அவுஸ்திரேலியா – நியூசிலாந்து ஆகிய நாடுகளிலில் தமிழ் மாணவர்களுக்காக இவர் ஆற்றிய பணி அளப்பரியது.

சிட்னி முருகன் கோயில், சைவப் பாடசாலைகள், தமிழ்க் கல்வி நிலையங்கள், அவுஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மூலம் சமூகப்பணியாற்றினார். சிட்னி சைவ மக்களுக்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

பல வருடங்களாக சைவ மக்களின் இறுதிக்கிரியைகளை திருமுறைகள் பாராயணம் செய்து இதற்காக புத்தகம் தயாரித்து வெளியிட்டார். இது உலகளாவிய ரீதியில் பாவிக்கப்படுகின்றது.


சிட்னியில் தமிழ்ச் சமூகத்திற்கு அவர் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி நியூசவுத் வேல்ஸ் அரசு 2006 இல் அவருக்கு 'THE ACHIEVER' என்ற விருதை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

அவர் எழுதி வெளியிட்ட 'பாட்டும் கதையும்' என்னும் புத்தகம் சிறுவர் இலக்கியத் துறையில் நிலவும் தேவையினை ஓரளவு நிறைவேற்ற முற்படுகிறது. இதில் உள்ள பாட்டுகள் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்றவை. ஏனென்றால், இவை மிகவும் இலகுவான சொற்களால் ஆனவை; எளிமையான ஓசை அமைப்புக் கொண்டவை. அத்துடன் சுவையான கதைகளையும் சொல்வனவாய் உள்ளவை.



**நா. மகேசன் எழுதி வெளியிட்ட நூல்கள்:**

குறளும் கதையும் (சிறுகதைகள், 1973), பாட்டும் கதையும் (கதைப்பாடல்கள், 1974), முனியன் முரளிகானன் (குறுநாவல், 1977), ஆத்திசூடி அறநெறிக் கதைகள் (1978), உடைந்த உள்ளம் (நாவல் 2 பாகங்கள், 1979), அவுஸ்திரேலியாவில் ஆத்திசூடி (சிறுவர் கதைத்தொகுதி, 1991), திருமுறையும் திருக்கதையும் (தேவார விளக்கக் கதைகள், 1994),பாலர் நாடகங்கள் பத்து (1995), நாடகக் கவியரங்கு நாலு (சிறுவர் கவியரங்குத் தொகுதி, 1995), ஆறுமுகமான பொருள் (திருப்புகழ் விளக்கம், 1995),திருவிழா (சிறுவர் சைவ சமய நாவல், 1996),*A Glimpse of Saiva Religion* (சைவ சமய விளக்கம், 1996),சிறுவர் பாடல்கள் (அவுஸ்திரேலியப் பின்னணியில் சிறுவர் பாடல்கள், 1997), சைவசமய குரவர் போற்றி மாலை (போற்றித் துதி, 1998),சைவசமய இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும் (1998), சிட்னி முருகன் பிள்ளைத் தமிழ் (பிரபந்த நூல், 1999),ஔவை வந்தால்.. (மாணவர் மேடை நாடகங்கள், 2001) ஆகியன மகேசன் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

---

# வேலைத்தலங்களில் மனக்கவலையின்றி மகிழ்ச்சியாக தொழில் புரிவது எவ்வாறு?







## ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் விழிப்புணர்வு வீதிநாடகம்

வேலைத்தலங்களில் மனக்கவலையைப் போக்கி மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக நாட்டில் ஆடைத் தொழிற்சாலைகள் அமையப்பெற்றுள்ளபிரதேசங்களில் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வீதி நாடகம் ஏறாவூர் பொதுச்சந்தைப் பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

உளரீதியில் பாதிக்கப்பட்ட மற்றும் மனஅழுத்தத்துடன்வாழ்கின்ற பெரும்பாலானவர்கள் உளநல ஆலோசனைகளைப் பெறுவதில்லை. இதனால் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியின்மை, தொழில் தலங்களில் உற்பத்தி குறைவு, தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குதல், போதைப்பொருள் பாவனை, தற்கொலை முயற்சி போன்றவை இடம்பெறுவது அறியப்பட்டுள்ளது.

இதனால் இந்த விடயங்களை கருத்திற் கொண்டு இத்திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

கட்டுநாயக்க, துல்கிரிய,அவிசாவளை, திருகோணமலை, பியகம மற்றும் நாவலப்பிட்டி போன்ற இடங்களிலும் வீதி நாடகங்கள நடத்தப்பட்டு வருவதுடன், *Better Works* திட்டத்தின் கீழ் இவை தொடரும் என ஐ.எல்.ஓ.திட்ட தலைமை அதிகாரி முரளி கணபதி தெரிவித்தார்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

---

# புரட்சித் தலைவரும், தலைவியும் கட்டிக்காத்த கட்சிக்கு நேர்ந்த கதி!



தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களிலுள்ள ஐந்து தொகுதிகளில், கட்டுப்பணத்தைப் பறிகொடுத்திருக்கிறது இரட்டை இலை. இது புரட்சித்தலைவர், புரட்சித்தலைவி இருவரும் கட்டிக்காத்த இயக்கத்துக்கு நேர்ந்திருக்கும் பெரிய அவமானம்!

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி, விக்கிரவாண்டி இடைத்தேர்தல் புறக்கணிப்பு என அரசியல்ரீதியாக அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சறுக்கலுக்கு மேல் சறுக்கலைச் சந்தித்துவரும் நிலையில், கட்சிக்குள் அவருக்கெதிரான மனத்தாங்கல் பரவலாக எழத் தொடங்கியிருக்கிறது. இந்தச் சூழலைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, அ.தி.மு.கவைக் கைப்பற்றும் கனவோடு பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் ஆகிய மூவரும் வியூகம் வகுப்பது கட்சி வட்டாரத்தில் பலத்த பேசுபொருளாகியிருக்கிறது.

2021 சட்டமன்றத் தேர்தல் சமயத்தில், "தீவிர அரசியலிலிருந்து ஒதுங்குகிறேன்" என்ற சசிகலா, "என்னுடைய மறுபிரவேசம் ஆரம்பமாகி விட்டது" எனத் தற்போது அறிவித்திருக்கிறார். மற்றொருபுறம், பன்னீர்செல்வமும் ஆதரவைத் திரட்ட சுற்றுப்பயணத்துக்குத் தயாராகிறார்.

இந்த மூவரின் செயற்பாடுகளும் பேச்சும் பொருட்படுத்தும் அளவில் இல்லை, நகைச்சுவையாகத்தான் இருக்கின்றது. ஆனாலும், அ.தி.மு.கவை அரசியல்ரீதியாக விழுங்கிவிட்டு, பிரதான எதிர்க்கட்சி இடத்தை நிரப்பிக் கொள்ளத் துடிக்கிறது பா.ஜ.க.

பா.ஜ.கவின் திட்டத்துக்கு, இந்த மூன்று பேரும் உதவுகிறார்களோ?' என்கின்ற கேள்வி இங்கே எழுகிறது. அதேசமயம், எதையுமே கருத்தில்கொள்ளாமல், எடப்பாடியும் அசமந்தமாக இருந்து கோட்டைவிடுகிறாரோ என்று தோன்றுகிறது.

## அ.தி.மு.கவைக் கைப்பற்ற மூன்று தரப்பினர் வகுக்கும் வியூகம்!



இது இவ்விதமிருக்க, சில தினங்களுக்கு முன்னர் சென்னை போயஸ் கார்டனில் உள்ள தன்னுடைய இல்லத்தில் தொண்டர்களைச் சந்தித்த சசிகலா, அதற்குப் பிறகு செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

அ.தி.மு.க சாதி அரசியல் செய்வதாகவும், தன்னுடைய மறுவருகையால், 2026 இல் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்குமென்றும் தெரிவித்தார் சசிகலா.

"அ.தி.மு.க. தொடர் சரிவுகளைச் சந்தித்து வருகிறது. ஒருசில சுயநலவாதிகள் அந்த இயக்கத்தை இந்த அளவுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். ஜெயலலிதா சாதி பார்ப்பவர் கிடையாது. அப்படி சாதி பார்த்துப் பழகியிருந்தால், உயர் சாதி வகுப்பைச் சார்ந்த அவர், என்னுடன் பழகியிருக்க மாட்டார். ஆனால் இப்போது நம் இயக்கத்தில் ஒரு குறிப்பிட்ட சாதிக்கு முன்னுரிமை கொடுத்து சாதி அரசியல் செய்கிறார்கள். இதை நானும், தொண்டர்களும், யாரும் பொறுத்துக்கொள்ள மாட்டோம். நான் பெங்களூர் சென்றபோது, சாதி பார்த்திருந்தால், அவருக்கு (எடப்பாடி கே. பழனிசாமிக்கு) வாய்ப்பளித்திருக்க மாட்டேன். இன்று அ.தி.மு.க. மூன்றாவது, நான்காவது இடத்திற்குப் போய்விட்டது, கட்டுப்பணமும் போய்விட்டது. சிலர் தானும் கெட்டு, கட்சியையும் கெடுக்கக் கூடாது" என்று வலியுறுத்திச் சொன்னார் சசிகலா.

"என்னுடைய பிரவேசம் இப்போது ஆரம்பமாகிவிட்டது. மக்கள் எனக்காக இருக்கிறார்கள். 2026 இல் அம்மாவுடைய ஆட்சியை நிச்சயமாக அமைப்போம். விரைவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன். 40 வருடங்களாக மக்கள் பணி செய்தேன், இனிவரும் காலமும் மக்களுக்காகத்தான் வாழ்வேன்" என்றார் அவர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. கூட்டணியும் அ.தி.மு.கவும் போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியடைந்தன. இந்தத் தோல்விக்குப் பிறகு, அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளராக இருந்து நீக்கப்பட்ட ஓ. பன்னீர்செல்வம், மறைந்த முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதாவின் தோழி சசிகலா ஆகியோர் அ.தி.மு.கவில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, அரசியலைவிட்டு விலகுவதாக அறிவித்த வி.கே. சசிகலா, பலமுறை தனது அரசியல் மறுபிரவேசத்திற்கு முயற்சி செய்திருக்கிறார். ஆனால், அதில் வெற்றி கிடைக்கவில்லை. இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க தோல்விக்குப் பிறகு, மீண்டும் அதேபோன்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார் சசிகலா.

ஆனால், இவரது அறிவிப்பை அ.தி.மு.க. நிராகரித்துவிட்டது. "அவருக்கும் அ.தி.மு.கவிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர் அ.தி.மு.க. உறுப்பினரே இல்லை" என்று சொல்கிறார் அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சரான டி. ஜெயக்குமார்.

இரு அணியினரதும் கருத்துகள் முரண்பாடானவையாகவே உள்ளன.

"நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்கிறார் வி.கே. சசிகலா.

ஆனால் "வெளியேற்றப்பட்ட யாரையும் சேர்க்கப் போவதில்லை" என்கிறார் எடப்பாடி கே. பழனிசாமி.

அம்மாதிரியான சூழலில், எடப்பாடி கே. பழனிச்சாமியை எப்படிக் கையாள்வது என்பது குறித்து சசிகலாவிடம் திட்டம் எதுவும் இருக்கிறதா எனத் தெரியவில்லை. சசிகலாவைப் பொறுத்தவரை, கடந்த இரண்டரை ஆண்டுகளில் தான் செய்ய வேண்டிய அரசியலை செய்யத் தவறிவிட்டார் என்பதே உண்மை.

சசிகலாவால் அடையாளம் காணப்பட்டு எம்.எல்.ஏ ஆகவும் எம்.பியாகவும் கட்சி



யின் மூத்த நிர்வாகிகளாகவும் உயர்ந்தவர்கள் பலர் உள்ளனர். ஆனால் இந்த இரண்டரை ஆண்டுகளில் எவரும் சசிகலாவை வந்து சந்திக்கவில்லை.

தன்னால் உயர்த்தி விடப்பட்டவர்கள் தன்னை வந்து சந்திப்பதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்பதை அவர் யோசித்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எந்த யோசனையும் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் ஒன்றாகச் சேரவேண்டும் என வெறும் கோரிக்கை மட்டும் விடுவதால் எதுவும் நடக்காது என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். சசிகலா மீண்டும் அரசியலில் இணைய விரும்பினால், எடப்பாடி கே. பழனிசாமியைச் சந்திக்க முயற்சி செய்ய வேண்டும் என்பதுதான் யதார்த்தம்.

விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இன்று அ.தி.மு.க. எடப்பாடி கே. பழனிசாமி வசம்தான் இருக்கிறது. அவர் இறங்கி வராத வரை எதுவும் சாத்தியமில்லை. ஆகவே, எடப்பாடி பழனிசாமியைச் சந்திக்க முதலில் சசிகலா முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

இந்த விடயத்தில் இன்னொரு சிக்கல் யாதெனில், அ.தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்ட சசிகலா, ஓ. பன்னீர்செல்வம், டி.டி.வி தினகரன் ஆகிய மூவருமே அ.தி.மு.கவின் தற்போதைய தலைமை குறித்து வெவ்வேறு விதமான நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள்.

"ஓ.பன்னீர்செல்வம் ஒரு சந்தர்ப்பவாதி. அவரை அ.தி.மு.கவில் இணைப்பது என்பது நடக்காத விஷயம். பொதுக்குழுவில் எடுத்த முடிவு இறுதியான முடிவு. அதேபோன்று சசிகலா மற்றும் சசிகலா சார்ந்த குடும்பத்துக்கும் அ.தி.மு.க கட்சிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. போயஸ் கார்டனில் இருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள். மன்னிப்புக் கடிதம் கொடுத்ததால் சேர்க்கப்பட்டனர். 2021 தேர்தலுக்கு முன்னர் தேர்தலில் இருந்து ஒதுங்கி கொண்டதாக கூறினார்கள். அவர்கள் அ.தி.மு.கவில் உறுப்பினர்கள் கூட கிடையாது. அ.தி.மு.கவில் இருந்து சசிகலாவை வெளியேற்றி விட்டோம், அதன்பிறகு எப்படி அவர்கள் உள்ளே வர முடியும்? அவர்களுக்கும் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்று கூறுகிறார்கள் எடப்பாடி தரப்பினர்..

"அ.தி.மு.க ஒன்றுசேர வேண்டும் என்றால் சசிகலா, பன்னீர்செல்வம் ஆகியோர் எடப்பாடி தலைமையை ஏற்றால் பரிசீலிப்போம் என்று முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி தெரிவித்துள்ளார்.

## சசிகலாவின் மறுபிரவேசத்தினால் உருவாகிய பரபரப்பு!



சைவசமயத் தலையாய நூல்கள் திருமுறை மெய்கண்ட சாத்திரம் போற்றுதும் அருள்விழா நேற்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது. அத்துடன் இலங்கைக்கு வருகைதந்துள்ள வீரசைவ பேரூராதீன இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானப் பெருமானார் கயிலைப் புனிதர்,முதுமுனைவர், திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளாரை வரவேற்று நடத்தப்பட்ட இந்நிகழ்வில் அவருக்கு ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபையின் தலைவர் தனபாலன் மாலை அணிவித்து கௌரவித்தார்.

## இன்றைய பலன்கள் (22.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்**: தொழில் வளம் சிறப்பாக இருக்கும். என்றாலும் ஒரு சில சமயங்களில் அதிக விரையமும் வருமானத்தில் தடுமாற்றமும் ஏற்படலாம். கவனம் தேவை.

**ரிஷபம்** : கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். செல்வம் சேர்க்க தேர்ந்தெடுத்த வழியில் வெற்றி கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடியும்.

**மிதுனம்**: பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு.

**கடகம்**: வரவைக்காட்டிலும் செலவு அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. எதிர்காலத்தை பற்றிய பயம் ஏற்படும்.

**சிம்மம்**: தொழில் வளர்ச்சியும் எதிர்பார்த்த லாபமும் கிடைக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். தன விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும்.

**கன்னி**: பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புகழ் பெற்றவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

**துலாம்**: பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். பூர்விக சொத்து பிரச்சினைகள் அகலும். வருமான உயர்வுக்கு வழி பிறக்கும்.

**விருச்சிகம்**: தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். உத்தியோகத்தில் உயர்வும் உன்னதமான வாய்ப்புகளும் வந்து சேரும்.

**தனுசு**: ஏற்றங்களும் நல்ல மாற்றங்களும் வந்து சேரும். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். பொருளாதார நிலை உயரும். புதிய பாதை புலப்படும்.

**மகரம்**: கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது. எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திடீரென பிரச்சனைகள் வந்து அலைமோதும்.

**கும்பம்**: மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டும். உற்சாகம் குறையும். உடல் நலத் தொல்லை அதிகரிக்கும்.

**மீனம்**: தன வரவு திருப்திகரமாக இருக்கும். கட்டிட பணி தொடரும். தொழில் வளர்ச்சியில் புதியவர்களை பங்குதாரர்கள்

## 289 சிறைக் கைதிகளுக்கு...

சிறைச்சாலையில் 19 கைதிகளும், மஹர சிறைச்சாலையில் 30 கைதிகளும், வாரியபொல சிறைச்சாலையில் 30 கைதிகளும், களுத்துறை சிறைச்சாலையில் இருந்து 28 கைதிகளும் உள்ளடங்களாக நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளிலுள்ள 289 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, 283 ஆண் கைதிகளும் ஆறு பெண் கைதிகளும் ஜனாதிபதியின் மன்னிப்பைப் பெற்றுள்ளனர். அரசியலமைப்பின் 34ஆவது பிரிவுக்கமைய, ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இவ்விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## உலக சந்தையில்...

யடுத்து உலகளாவிய ரீதியில் விலை குறைவடைந்துள்ளது.

இந்நிலை காரணமாகவே சீனியின் விலை 2.32 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மீனவர்களிடை...

பேருவளை கடற்றொழில் பரிசோதகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.சம்பவம் தொடர்பில் படகின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஒரு Kg ஜெக் மக்கரல்...

அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று (21) கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது. SLIC நிறுவனத்தின முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி கபில பாலசூரியவினால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் வோனந்தாவிடம் சம்பிரதாயபூர்வமாக இந்த செமன் பக்கற் கைளிக்கப்பட்டது. பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு உகந்த வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளதாக பாலசூரிய அமைச்சரிடம் தெரிவித்தார்.

இதன் போது அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் நோக்கமெனவும் அதற்காக அனைத்து உதவிகளையும் அரசாங்கம் தேசிய உற்பத்தியாளர்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் இதற்கு SLS (இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம்) தரச் சான்றிதழை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நிசாந்த விக்கிரமசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சேதமடைந்துள்ள வீடுகளுக்கு...

புனரமைப்பதற்காக, இடம்பெற்றுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற கால நிலையினால் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது தொடர்பாக நேற்று முன்தினம் (20) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில நாட்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பாதித்த சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட பலத்த காற்று, வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது அல்லது அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு தகுந்த இழப்பீடு வழங்குவது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு பயனாளிகளின் இணக்கப்பாட்டின் பேரில் அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு உரிய இழப்பீடு வழங்குதல் அல்லது முப்படைகளின் பங்களிப்புடன் உடனடியாக வீடுகளைக் நிர்மாணிக்கவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்காக, இடம்பெற்றுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இயற்கை அனர்த்தங்களினால் முழுமையாகவும் பகுதியளவும் சேதமடைந்த வீடுகள் தொடர்பில் முறையான அறிக்கையை வழங்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு சாகல ரத்நாயக்க மேலும் பணிப்புரை விடுத்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், முப்படைத் தளபதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டதுடன், சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## EPF தரவுகளை...

தொழில் திணைக்களத்தின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குக் குழு, பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் கூடிய போதே இது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தில் அதாழில் வழங்குநர்களை பதிவு செய்த பின்னர், ஊழியர் சேமலாப நிதி, மத்திய வங்கிக்கு வழங்கப்படுவதாகவும், மத்திய வங்கி ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் தொழில் திணைக்களத்துக்கு கொடுப்பனவுகள் பற்றிய தரவுகளை வழங்குவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

எனினும் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் தரவுகளைப் பெறுவதற்குப் பதிலாக, தொடர்ந்து புதுப்பிக்கக்கூடிய ஒரு கட்டமைப்பை தொழில் திணைக்களம் கொண்டிருக்க வேண்டுமென்று குழு சுட்டிக்காட்டியுள்ளது. இது மக்களின் பாதுகாப்புக்கு இன்றியமையாதது எனவும் குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களம் இணைந்து கூடிய விரைவில் கூட்டத்தை நடத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

டிஜிட்டல் தரவு கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கீடுகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை செலுத்தத் தவறிய நிறுவனங்கள் மீது தற்போது 15,000 வழக்குகள் நிலுவையில் இருப்பதும் தெரியவந்தது.

## உயிரிழந்தவர்களின்...

சுமார் 1,000 வரை அதிகரித்துள்ளதாக அரபு நாடுகளின் இராஜதந்திரிகள் அறிவித்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்தவர்களில் 68 இந்தியர்களும், 528 எகிப்தியர்களும், 60 ஜோர்தானியர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹஜ் யாத்திரிகர்கள் வெப்பத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக சிகிச்சை பெற்றுவருவதாக சவுதி அரேபிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஹஜ் யாத்திரிகர்கள் பகல் வேளைகளில் நீண்ட நேரம் வெயிலில் இருப்பதன் காரணமாக அதிகளவானோர் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி செய்த...

காலகட்டத்தில் இலாபம் பாராமல் சேவை வழங்கினர். அதைத்தான் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்து வருகிறார்.

இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியுமென்று நாமும் நினைக்கவில்லை. கண்ணால் பார்க்கவும், காதால் கேட்கவும் முடிந்தவரென்றால், நம் நாட்டை அவர் இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டாரென்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

வங்குரோத்தடைந்த நாடுகள் மத்தியில் மிக விரைவாக இயல்பு நிலைக்கு வந்த நாடு இலங்கை என்பதை உலகமே ஏற்றுக் கொள்கிறது. உலகமே பாராட்டுகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டிருப்பது பொருளாதார அதிசயமென உலக நாடுகள் கூறுகின்றன. வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை இவ்வளவு சீக்கிரம் மீட்டெடுத்த நாட்டை நாங்கள் பார்த்ததில்லை என்கிறார்கள்.

எத்தியோப்பியாவின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பணிகளின்போது, இலங்கையின் விக்கிரமசிங்கவை பார்க்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. ஆனால் நம் நாட்டு மக்கள் அவர் மீது குற்றம் சாட்டுகிறார்கள். நாட்டின் இந்த உண்மை நிலையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.'' என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

## ஜுலை 10 ஆம் திகதி...

கையடக்கத்தொலைபேசியூடாக 'DoE' என்ற பரீட்சைத் திணைக்களத்தின் செயலியை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் விண்ணப்பதாரிகள் அந்தந்த பாடசாலை தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்ற பின்னரே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாதென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## சூழல் சார் சுற்றுலா... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

*ஆய்வு செய்யும் வாய்ப்பை இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கியமை இதன் சிறப்பம்சமாகும்.*

*இங்கு, ரெம்சார் ஒன்றியத்தின் கிழக்காசிய பிராந்திய மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சு சென்ங் ஓஹ், (Suh Seung Oh) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நினைவுப் பரிசையொன்றையும் வழங்கி வைத்தார்.*

*இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:*

*''சர்வதேச சதுப்பு நிலங்கள் ஒன்றியத்தின் முதல் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கிடைத்தமையை அதிஷ்டமாகக் கருதுகிறேன்.*

*சதுப்பு நிலங்கள், யானைகள் மற்றும் பிற விலங்குகள் இன்று பூமியில் அழிந்து வருகின்றன.*

*அபிவிருத்தி மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பால் இன்று நாடு முழுவதும் சதுப்புநிலங்கள் குறைந்து வருகின்றன. எனவே இவற்றைப் பாதுகாப்பதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். அதற்காக அனைவரும் பொதுவான இலக்குடன் ஒன்றாகப் பணியாற்ற வேண்டும்.*

*சுமார் 500 ஆண்டுகள் பின்நோக்கிப் பார்த்தால், இன்று நாம் இருக்கும் இந்த இடமும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் சதுப்பு நிலங்களால் சூழப்பட்டிருந்தது.*

*ஆனால் படிப்படியாக அது எவ்வாறு நிரப்பப்பட்டு வந்தது என்பதைக் கண்டோம். இந்த சதுப்பு நிலங்களை நாம் பாதுகாக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் அதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. அதில் இந்த தியசரு பூங்காவும் ஒன்று என்று குறிப்பிடலாம்.*

## கடும் பசி, தூக்கத்தில்...

இதனையடுத்து சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய போது அந்த நபர் உயிருடன் இருப்பது கண்டறியப்பட்டு உடனடியாக வைத்திய சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டை செய்த காணி உரிமையாளர் வென்னப்புவ உள்ளூராட்சி சபையின் முன்னாள் தலைவரெனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த நபர் உண்ணாமல் இருந்ததால் மயக்கமடைந்து தூங்கிவிட்டதாகவும், அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி ரணிலால்...

ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். கடந்த காலம் அனைவருக்கும் தெரியும்.

முன்னாள் ஜனாதிபதி அனைத்து துறைகளையும் அழித்தார். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னரே நாம் நல்லதொரு நிலையை அடைந்துள்ளோம்.

குறிப்பாக இந்த ஜனாதிபதித்தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களும் அவருக்கு வாக்களிக்க தயாராக உள்ளனர். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அதனால் தான் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க அனைத்து மக்களும் தயாராக உள்ளனர். எனவேதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எமது கட்சி ஆதரவளிக்கிறதென குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் கடன்பேண்...

கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அவர் இதனை தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்ததாவது:

சீனா தன்னால் முடிந்தளவிற்கு இலங்கையின் சமூகபொருளாதார அபிவிருத்திக்கு உதவுமென அவர் குறிப்பிட்டார்.

## இலங்கைஇந்திய...

பாதுகாப்பு நடவடிக்கை குறித்து ஆய்வு செய்தார். நேற்று வெள்ளிக்கிழமை (21) சர்வதேச யோகா தினம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் மத்திய பாதுகாப்புத் துறை சார்பில் யோகா பயிற்சியும் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வியாழக்கிழமை (20) சிறிய ரக இராணுவ விமான மூலம் ஐ.என்.எஸ் பருந்து கடற்படை தளத்துக்கு வந்த மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத், இந்திய கடற்படை மற்றும் கடலோர கடற்படை காவல் படை முகாம்களை ஆய்வு செய்த பின்னர் இராமேஸ்வரம் கடல் பகுதியை ஆய்வு செய்ததுடன், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதையடுத்து நேற்றுக் காலை இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில் தரிசனம் செய்த மத்திய இணை அமைச்சர், பின்னர் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் நடைபெற்ற யோகா தினத்தில் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹோவர் கிராஃப்ட் கப்பலில் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை வரை சென்று கடலுக்கு மத்தியில் அமைந்துள்ள மணல் திட்டில் இறங்கினார்.

பின்னர் சர்வதேச கடல் எல்லையில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, கண்காணிப்புகள் குறித்தும் ஆய்வு செய்தவுடன் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்பு அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

பின்னர் மீண்டும் ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பல் மூலம் தனுஷ்கோடி வந்து சாலை மார்க்கமாக ஐ என் எஸ் பருந்து கடற்படைத் தளத்திற்கு சென்றார்.

முன்னதாக முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாம் நினைவகத்திற்கு சென்று அவரது சமாதியில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் ஆய்வின் போது அவருடன் இந்திய கடலோர காவல்படை மண்டபம் முகாமின் நிலைய கமாண்டர் வினைக்குமார் மற்றும் கடற்படை தளத்தின் நிலையை கமாண்டர் கேப்டன் அஸ்வின் மேனன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

## 13ஆவது...

ஜனாதிபதியாகும் கனவு காண்பவர்கள் வடக்குக்குச் சென்று அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக வாக்குறுதி வழங்குகிறார்கள்.13 ஆவது திருத்தம் அவர்களின் தந்தை வழி சொத்தல்ல என்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்பி தெரிவித்தார். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே தேர்தல் காலத்தில் வடக்கிலும், தெற்கிலும் 13 ஆவது திருத்தம் பற்றி பேசப்படுகிறது. அவ்வாறான வர்களுக்கு வடக்கு மட்டுமன்றி தெற்கு மக்களும் வாக்களிக்கக் கூடாது. 13 ஆவது திருத்தத்தை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துபவர்கள் அனைவரும் தேசத் துரோகிகளே என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க நாம் இரத்தம் சிந்தியுள்ளோமென சபையில் தெரிவித்த அவர், வடக்கு மற்றும் தெற்கு இனவாதிகளுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக தலைவர்களாக அவர்களைத் தெரிவு செய்தால் நாடு உருப்படாமல் போகும் எனவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சபையில் உரையாற்றுவதற்கு நான் எதிர்க்கட்சி பிரதம கொரடாவிடம் அனுமதி கோரினேன். ஆனால் அவர் ' உங்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது' என குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்காத காரணத்தினாலா? உரிமை மறுக்கப்படுகிறது என்று நான் கேட்டேன். அதற்கு அவர் பதில் கூறவில்லை. சபையில் உரையாற்றுவதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். நான் 1 இலட்சத்து 13 ஆயிரம் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானேன். ஆனால் எனக்கு அனுமதி வழங்க மறுத்த நபர் 70 ஆயிரம் வாக்குகளையே பெற்றுள்ளாரென்பதை குறிப்பிட வேண்டும்.

எனினும் எனது முயற்சியை நான் கைவிடவில்லை. அரச அனுசரணையுடன் உரையாற்றுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் தினமும் சுமார் 40 நிமிடங்கள் வரை சபையில் உரையாற்றுகிறார். இதனால் ஏனைய உறுப்பினர்களுக்கு உரையாற்றுவதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது. அது அநீதி. இவ்விடயம் தொடர்பில் சபாநாயகர் உரிய கவனம் செலுத்த வேண்டும். கட்சித் தலைவர்களுக்கு சாதகமாக செயற்படாத போது எமது உரிமை மறுக்கப்படுவது முறையற்றது.

மக்களுக்கு மதுபானம் வழங்கி நான் அரசியல் செய்யவில்லை.அத்துடன் அதிவேக நெடுஞ்சாலை அமைச்சுப் பதவியை வகித்து, மகளுடன் இணைந்து அரச நிதியை நான் கொள்கையடிக்கவுமில்லை. அதேபோன்று கசினோ வர்த்தகர்களின் நிதியை பெற்று பாடசாலைகளுக்கு நிவாரணம் வழங்கவுமில்லை.

எனது தேர்தல் தொகுதிக்கு புதிய ஒருங்கிணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது தொகுதியில் உள்ளவர்கள் அனைவருக்கும் மதுபானம் வழங்குகிறார். 2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் நாடு தற்போது முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவில்லை என்பதை அரசாங்கம் கவனத்திற் கொள்ள வேண்டும். 2022 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் மூலம் இடைக்கால ஜனாதிபதி தெரிவு இடம்பெற்ற போது பிறிதொரு நபரின் பெயரை வேட்பாளராக அறிவித்து விட்டு தலைமறைவாக இருந்தவர்களால், பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## துன்பப்பட்ட காலத்தை...

கடந்த கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின்போது தப்பித்து ஓடாமல் அதனை எதிர்கொண்டு நாட்டுக்காக தமது பொறுப்புகளை நிறைவேற்றிய மருந்தக உரிமையாளர்கள் சங்கத்துக்கு ஜனாதிபதி தமது வாழ்த்துகளையும் இதன்போது தெரிவித்தார்.

2015 புதிய மருந்துகள் சட்டம் இயற்றப்பட்டதன் பின்னர் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் நிறுவப்பட்டது.

நாட்டில் மருந்துகளின் விலையை கட்டுப்படுத்தல், மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாமல் மேற்கொள்ளப்படும் பணிகளில் நிபந்தனையற்ற பங்களிப்பை வழங்குதல், அரசின் சிறுநீரக நிதி, சுகாதார நிதியை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல சமூக நலத் திட்டங்களுக்கு இந்தச் சங்கம் பங்களித்துள்ளது.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தேசமான்ய சந்திக கங்கந்தவுக்கும், சிறந்த மாவட்ட சங்கங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது விருதுகளை வழங்கினார்.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"கடந்த கொரோனா தொற்றுநோய் காலத்தில் நாட்டுக்குத் தேவையான மருந்துகளை வழங்கிய மருந்தக உரிமையாளர்கள் சங்கத்திற்கு அரசின் சார்பில் எனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாடு இக்கட்டான சூழலை எதிர்கொண்டு அரச நிறுவனங்கள் வீழ்ந்து கொண்டிருந்தபோது நீங்கள் முன்வந்து உங்களது பொறுப்பை நிறைவேற்றினீர்கள். தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து உங்களின் சங்கம் அளித்துள்ள அறிவிப்பின்படி, அவை குறித்து கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இன்று இந்த நாட்டில் பலர் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் அதற்கு உங்கள் முயற்சிதான் காரணம் என்று கூற வேண்டும். கடந்த காலங்களில் நாட்டுக்குத் தேவையான மருந்துகளைப் பெற பணம் இருக்கவில்லை.

ஆனால் அந்த கடினமான நேரத்தில் நீங்கள் தப்பி ஓடவில்லை. நீங்கள் உங்கள் கடமையை செய்தீர்கள். அதைத்தான் நம் நாட்டில் உள்ள அனைவரிடமும் எதிர்பார்க்கிறோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது நடைபெறுவதில்லை. இந்தப் பிரச்சினைகளில் இருந்து எப்படி தப்பிப்பது என்று உங்களுக்கோ எனக்கோ தெரியாது. நாம் அனைவரும் எங்களால் இயன்றவரை நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றபோது நாடு மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்தது. நாட்டில் அந்நியச் செலாவணி இல்லை. தேவையான மருந்துகள், எரிபொருள் கொண்டு வர பணம் இல்லை. கிடைக்கும் பணத்தை எரிபொருளுக்கு வழங்குவதா அல்லது உரத்திற்கு வழங்குவதா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால் நாம் உரங்களைப் பெற்று விவசாயப் பணிகளை ஆரம்பித்தோம்.

அதனூடாக உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு மருந்து மற்றும் எரிபொருளை மக்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தோம். அத்தகைய கடினமான சூழ்நிலையை நாங்கள் கடந்து வந்தோம். இந்திய அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட பணத்தால், இந்தியாவிலிருந்து மருந்துகளைப் பெற முடிந்தது. பங்களாதேஷில் இருந்து பெறப்பட்ட பணத்தால், உணவுப் பொருட்களைப் பெற முடிந்தது.

எவ்வாறாயினும், ஒரு நாடாக நாம் முதல் 06 மாதங்களை மிகவும் சிரமத்துடன் கடந்தோம். அதன் பிறகு நாடு படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. மக்கள் உங்களிடம் வந்து பணம் இல்லாமல் மருந்துகளைக் கேட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அவர்களுக்கு மருந்துகளை கொடுக்காமல் சாகச் சொல்வதா, நட்டத்தை அனுபவித்து மருந்து கொடுப்பதா? என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டியேற்பட்டது.

நாம் அனைவரும் அந்தக் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. நாம் அனைவரும் சிரமப்பட்டு அந்த முடிவுகளை எடுத்ததால்தான் நாம் ஒரு நாடாக முன்னோக்கி வருகிறோம். மேலும் VAT வரியை அதிகரிக்க வேண்டியிருந்தது. இந்த முடிவுகளால் நாட்டின் வருமான மூலங்கள் அதிகரித்ததன் காரணமாக ரூபாயின் பெறுமதி வலுப்பெற்று, பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடிந்தது.

கடந்த வாரம், IMF பணிப்பாளர்கள் குழுவின் இரண்டாம் சுற்று கலந்துரையாடல்களை நடத்தினோம். இலங்கையை வழிநடத்தும் திட்டம் சரியானது என்று அதன்போது சான்று கிடைத்துள்ளது. அதன்படி கடனைச் செலுத்த கால அவகாசம் கிடைத்துள்ளது. மேலும் இந்தப் பணியை நிறைவுசெய்வது குறித்து தற்போது சீனாவுடன் கலந்துரையாடி வருகிறோம்.

# வடக்கின் உதயம்

## நயினாதீவு நாகபூசணி அம்மன் தீர்த்தம்



(யாழ். விசேட நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவத்தின் தீர்த்த திருவிழா நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தில் காலை இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, நாகபூசணி அம்மன், பிள்ளையார் மற்றும் முருகன் சகிதம் கங்காதரணியில் தீர்த்தமாடினார்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் சூழ ஆலயத்தில் இருந்து தீர்த்தக்கரைக்கு எழுந்தருளினார்.



யாழ்ப்பாணம் – வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா கடந்த (15) வியாழக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்ற காட்சி. (யாழ். விசேட நிருபர்)

## நூல் அறிமுக நிகழ்வு

(கோப்பாய் குறூப் நிருபர்)

கல்வியியல் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் எழுதிய "ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம்" சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு நாளை (23) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சுழிபுரத்தில் அமைந்துள்ள கே. ஏ. எஸ். சத்தியமனை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நிகழ்ச்சி தொகுப்பை புதுக் குடியிருப்பு பிரதேச கலாசார உத்தியோகத்தர் சபா. தனுஜன் "ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம்" நூலுக்கான கருத்துரைகளை முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சபா. குகதாஸ், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், சிறப்பிதழ் தொடர்பான கருத்துரைகளை வலி. மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜெயந்தன், பிரபல பட்டிமன்ற நடுவரும், அளவெட்டி அருணோதய கல்லூரி ஆசிரியருமான த. சிறீபிரகாஸ், நூலக செயல்பாட்டாளர் ஜெ.தஸ்மினி ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

## மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடி அகற்றப்பட்டது

( மன்னார் குறூப் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கிய பிரதான சோதனை சாவடி மற்றும் வீதி தடைகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை (21) அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளது.

பல வருடங்களாக குறித்த சோதனை சாவடியை அகற்றுமாறும் குறித்த சோதனை சாவடியினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை முன்னெடுத்ததுடன், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு சோதனை சாவடியை அகற்றுவதற்கான கோரிக்கையை கடிதங்களாகவும் மகஜர்களாகவும் வழங்கியிருந்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குறித்த சோதனை சாவடியை அகற்றி தருமாறு நேரடி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக நேற்றைய தினம் (21) குறித்த பாலப் பகுதியில் காணப்பட்ட வீதி தடைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் அப்பகுதியில் ராணுவம் தொடர்ச்சியாக நிலைகொண்டுள்ளதுடன் ராணுவ கட்டுமாணங்கள் எவையும் அகற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மருதமடு அன்னையின் ஆடித்திருவிழாவை முன்னிட்டு மன்னார் அரச அதிபர் தலைமையில் மடுவுக்கு களப் பயணம்

(தலைமன்னார் விஷேட நிருபர் வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மருதமடு அன்னையின் ஆடித்திருவிழாவை முன்னிட்டு மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மடு பகுதிக்கு (14) கள விஜயம் இடம்பெற்றது. மன்னார் மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட யூபிலி ஆண்டாக இந்த ஆடிப் பெருவிழா அமைந்துள்ளமையால் மடு அன்னையின் ஆடி பெருவிழா யூபிலி ஆண்டு பெருவிழாவாக அமைந்துள்ளதுள்ளதால் திருஅவை முக்கியஸ்தர்கள் அரசியல் தலைவர்கள் வருகை தர இருப்பதால் பாதுகாப்பு மற்றும் ஏனைய ஒழுங்குகளை கவனிக்கும் முகமாகவும் வனவள திணைக்கத்தின் முறையற்ற செயற்பாடு கா ரணமாகவும் மன்னார் அரச அ திபரின் தலைமையில் கள விஜயம் இடம்பெற்றது.

மடுப்பரிபாலகர் அருட்பணி ஏ.ஞா னப்பிரகாசம் அடிகளார் . மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், சுகாதார திணைக்களத்தினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர், வனவள துறையினர், வன ஜீவராசிகள் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் இக்கள விஜயத்தில் கலந்து கொண்டனர்.

இங்கு மடு வீதி தொடக்கம் மடு வரையான வீதி துப்புரவு பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தக்காரர்கள் ஈடுபட்டபோது வனவள துறையினர் முறையற்ற விதத்தில் நடத்தியதாக மடு பரிபாலகர் மற்றும் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் தெளிவுப்படுத்திய போதிலும் வனவள திணைக்களம் அதற்கு இணங்காத நிலை காணப்பட்டமையாலேயே இக்கள விஜயம் இடம்பெற்றது.

இந்த மடு வீதி துப்புரவு செய்யும் விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் வனவள துறையினருக்கும் இடையே தீர்வு எட்டப்படாத காரணத்தினால் இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன்போது மடு ஆலயப் பகுதியில் வானூர்தி இறங்குத்தளம், பாலம்பிட்டி வீதி, இவற்றுக்கு அருகாமையிலுள்ள பற்றைக்காடுகளை துப்புரவு செய்து கடைகள் அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டது.



பாலம்பிட்டி வீதிக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கு பொலிஸ் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட போதும் இங்கு சனத் தொகை அதிகமாக காணப்படும் என்பதால் இது கைவிடப்பட்டது. கோயில் வளாகத்தில் அமைந்துள்ள மலசலக்கூடங்கள், யாத்திரிகர் தங்குமிடம் அமைக்கும் இடங்கள் போன்றவற்றை மடு பரிபாலகரால் இக் கள குழுவினருக்கு காண்பிக்கப்பட்டது.

பரப்புக்கடந்தான் வீதி எவ்வித துப்புரவு செய்யப்படாது காணப்பட்டமையால் இவ்வீதி தொடர்பாக வனவள துறையினர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## குருநகரில் ஐவர் கைது



(யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் குருநகரில் பொலிஸார் நடாத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின்போது ஐவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொசன் தினத்தில் அரச மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவரும், கஞ்சா கலந்த மாவாவுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 19 சாராய கால் போத்தல்கள், 70 மில்லிகிராம் ஹெரோயின், 80 கிராம் கஞ்சா கலந்த மாவா என்பன கைப்பற்றப்பட்டது.

## கனடியத் தமிழர் பேரவையின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் பூப்பந்தாட்டப் போட்டி



முல்லைத்தீவு மாவட்ட பூப்பந்து விளையாட்டரங்கில் ஜூன் 16, 2024 அன்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட திறந்த நிலை பூப்பந்துப் போட்டியானது குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெற்றுள்ளது. கனடியத் தமிழர் பேரவையின் (CTC) அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவட்டம் முழுவதிலும் உள்ள இளம் விளையாட்டு வீரர்கள் ஒன்றிணைந்து, சிறப்பான திறமையையும் விளையாட்டுத்திறனையும் வெளிப்படுத்தினர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது, இளைஞர்களுக்கு நேர்மறையான கவனச்சிதறல்களை வழங்குவதற்கும், தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளில் இருந்து அவர்களை விலக்குவதற்குமான விளையாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு CTC பிரதிநிதிகளிடம் கோரப்பட்டது. இந்த அழைப்பிற்கு பதிலளித்த CTC , போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் இளைஞர்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டின் முதல் படியாக, ஆரம்ப ஆண்டுப் போட்டிக்கு நிதியுதவி வழங்கியிருந்தது. ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களாலும் பார்வையாளர்களாலும் இந்தப்போட்டி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. CTC இன் இந்த பங்களிப்பானது விளையாட்டுகளில் இளைஞர்களின் ஈடுபாட்டை வளர்ப்பதற்கும் சமூகத்தின் நல்வாழ்வுக்கு பங்களிப்பதற்கும் அவர்களது அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த நிகழ்வை சாத்தியமாக்கிய அனைத்து பங்கேற்பாளர்கள், அமைப்பாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். போட்டிகள் சுமூகமாக நடைபெறுவதற்கு உழைத்தமைக்காக முல்லைத்தீவு மாவட்ட பூப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு விசேட நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## ஈ.பி.டி.பி உறுப்பினர் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

வத்திராயன் வடக்கு தாளையடி கடற்கரையில் அமைந்துள்ள மீன்பிடி வாடியில் தங்கியிருந்த ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் வடமராட்சி கிழக்கு உறுப்பினர் பவானி மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் எரிகாயங்களிற்குள்ளாகி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (20) இரவு 10:30 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதனால் வாடி தீப்பிடித்து எரிந்த நிலையில் பவானி எனப்படும் சரவணபவானந்தன் சிவகுமார் என்பவர் எரி காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## மனித வாழ்வில் சமயச் சுதந்திரம்; அறிந்து கொள்வதற்கான நிகழ்வு



(தலைமன்னார் விஷேட நிருபர் வாஸ் கூஞ்ஞ)

மனித வாழ்வில் சமயச் சுதந்திரம் என்ற தொனிப்பொருளில் மன்னார் நகர சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (15) 'வேம்' என்ற கிராமிய முகாமைத்துவ நிறுவனங்களுக்கான சம்மேளனமும், ஐக்கிய அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து மன்னாரில் நிகழ்வு ஒன்றை நடாத்தியது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்கள், மும்மத சமயங்களின் மதத் தலைவர்கள் அருட்பணி எஸ் மாக்கஸ் அடிகளார், இந்து சமயத் தலைவர் மஹா தர்மகுமாரக் குருக்கள், மன்னார் பெரிய பள்ளிவாசல் மௌலவியும் ஹாதி நீதிபதியுமான எஸ்.ஏ.அசீம், மன்னார் சட்டத்தரணி எம். பி.ரசீனா பர்காத், ஏடீரி நிறுவனத்தின் பிரதிநிதிகள், கலாச்சார உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னார், மடு, மாந்தை மேற்கு, முசலி. நானாட்டான் பகுதிகளைச் சேர்ந்த அமைப்புகளின் பிரதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது அனைத்து சமயங்களின் அடையாளங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் கலந்து கொண்ட மும்மதத் தலைவர்களும் அவரவர்களின் மதங்களின் கோட்பாடுகள் நடைமுறைகளை தெளிவுப்படுத்தி உரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சைவ வாழ்வியலில் திருவாசகம்: சிறப்பு சொற்பொழிவு நாளை

(கோப்பாய் குறூப் நிருபர்)

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீபால் திருகுணானந்த குருக்களால் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவும் மாதாந்த ஈழத்து சித்தர்கள் குருபூசையும் நடத்தப்படுகின்றது.

இதன் இரண்டாவது தொடர் நிகழ்வில் செல்லப்பா சுவாமிகள் குருபூசை பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (23) காலை 9.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார். செல்லப்பா சுவாமிகள் குருபூசையைத் தொடர்த்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் "தேரடிச் சித்தர் மகிமை" என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் சொற்பொழிவும் நடைபெறும்.

தொடர்ந்து ஆன்மீக விருந்தினர் உரையும் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மன்னாரில்

## பொசன் தினத்தையொட்டி பொலிஸார் பாண் தானம், தாக சாந்தி வழங்கி வைப்பு

(மன்னார் குறூப் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)



மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த பொசன் பாண் தானம் மற்றும் தாக சாந்தி வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் ஏற்பாடு செய்த பொசன் பாண் தானம் வழங்கும் நிகழ்வு காலை 11 மணியளவில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் முன் இடம் பெற்றது. குறித்த நிகழ்வை மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.எஸ். ஏ.சந்திரபால வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத், மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி பிரசாந் ஜெயதிலக்க மற்றும் பொலிஸார் கலந்து கொண்டனர். இதனை தொடர்ந்து தொடர்ந்து மன்னார் தலைமையக பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த தாகசாந்தி வழங்கும் நிகழ்வு பொலிஸ் நிலையத்திற்கு முன் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



### பொசன் தினத்தை முன்னிட்டு

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்த 7 கைதிகள் விடுதலை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**




பொசன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்த 7 கைதிகள் நேற்று(21) வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம அத்தியட்சகர் என்.பிரபாகரன் முனனிலையில் இந்த ஏழு பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்யும் நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம அத்தியட்சகர் என்.பிரபாகரன் உட்பட சிறைச்சாலை அதிகாரிகளும் நலன்புரி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## இந்தியாவிலிந்து திரும்பிவந்து மீள்குடியேறிய திருமலை மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

**கிண்ணியா மத்திய நிருபர்**

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து மீளக்குடியமர்ந்த திருகோணமலை வாழ் மக்களுக்கு தலா 2 இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் கடந்த வியாழனன்று (20) வழங்கப்பட்டன.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலக நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு கழகம் (Oferr Ceylon) ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் நிலைபேறான மீள்குடியேற்றம் மற்றும் மீள் ஒருங்கிணைத்தலுக்கான ஆதரவு செயற்திட்டத்தின் கீழ், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் இதற்கான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை பட்டினமும் சூழலும், குச்சவெளி, மூதூர், மொரவெவ ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து 60 பயனாளிகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்து கொண்டார்.

### பொசன் போயா தினத்தை முன்னிட்டு

## திருகோணமலை கோகண்ண ரஜ மகா விகாரையில் சிரமதானம்

**கிண்ணியா மத்திய நிருபர்**



2024 ஆம் ஆண்டு பொசன் போயா தினத்தை முன்னிட்டு திருகோணமலை கோகண்ண ரஜ மகா விகாரையில் நேற்றுமுன்தினம் (20) சிரமாதன நிகழ்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இந்த சிரமதான நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது திருத்தச் சட்டத்தை தட்டிக்கழித்தவர்கள் இன்று அதுதான் ஏற்புடையது என்கின்றனர்

### தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உதவிப் பொதுச் செயலாளர் சலீம்

**துறைநீலாவணை நிருபர்**

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் படியான 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் கிடைத்த இணைந்த மாகாண சபையை தோழர் பத்மநாபா தீர்க்க தரிசனமாக ஏற்றுக்கொண்டதுடன் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவும் முனைப்புடன் செயற்பட்டார்.

அன்று அதனை தட்டிக்கழித்து உதாசீனம் செய்தவர்கள் இன்று 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்புடையது என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளனர்". இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உதவிப் பொதுச் செயலாளரும், அம்பாறைப் பிராந்திய அரசியல் துறை அமைப்பாளருமான மத்திய குழு உறுப்பினர் தோழர் சலீம் (பிர்தௌஸ்) கூறினார்.

தமிழர் சமூக ஜனநாயகக்கட்சியின் (பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப்) அனுசரணையுடன், பாண்டிருப்பு 2ஏ அன்பு வழிபுரத்திலுள்ள கட்சியின் மாவட்ட தலைமை அலுவலக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற 34ஆவது தியாகிகள் தின நிகழ்விற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் தியாகி தோழர் கமல நாதனின் (கண்ணன்) சகோதரி டேவிட் ஈஸ்வரி தோழர் பத்மநாபாவின் திரு உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் மறைந்த தோழர்களுக்கு தியாகச் சுடரேற்றி இரு நிமிடமௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் நிகழ்வில் இலவச தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

### மூதூர் மொகமட் ராபியின்

## "தூக்கணாங்குருவிகள்" நூல் வெளியீட்டு விழா

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

எழுத்தாளர் மூதூர் மொகமட் ராபியின் மூன்றாவது சிறுகதை தொகுப்பாகிய "தூக்கணாங்குருவிகள்" நூல் வெளியீட்டு விழா நாளை 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் காலை 9.30க்கு நடை பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர். பரீத் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் ஏ.எப்.எம். அஷ்ரஃப் நூலை அறிமுகம் செய்யவுள்ளார்.

சம்பிரதாயபூர்வ நூல் வெளியீட்டு நிகழ்வுகளை அடுத்து, "தூக்கணாங் குருவிகளில் பெண்கள்" எனும் தலைப்பில் பாடசாலை அதிபரும் கவிஞருமான சுஜந்தினி யுவராஜா நூலில் இடம்பெற்றுள்ள கதைகளில் வரும் பிரதான பெண் பாத்திரங்கள் பற்றி விபரிக் கவிருக்கின்றார்.

"மூதூர் மொகமட் ராபியின் எழுத்தினுள்ளே.." எனும் தலைப்பில் ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம் நியாஸ் உரையாற்ற, பிரபல வழக்கறிஞரும் எழுத்தாளருமான எம்.சி. சபருள்ளாஹ் "தூக்கணாங்குருவிகள்" நூலின் மதிப்புரையை ஆற்றவுள்ளார்.

## பல்கலை மாணவர்களுக்கு நிதியுதவி

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகி, மேற்படிப்பைத் தொடர பணவசதி அற்ற மாணவர்களுக்குமாக திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் நேற்று(21), மூன்று மாதத்துக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. அவ்வாறு மொத்தம் 64 மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் ஆகியோர் இதற்கான காசோலைகளை திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் வழங்கினர்.

இதற்கான நிதி உதவியைக் கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான வடிவேல் கார்த்திக் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரியும், ஆசிரியருமான இவர் அண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான கிராம உத்தியோகத்தராகவும் நியமனம் பெற்றுள்ளார். பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராகிய இவர் பெரியநீலாவணை வடிவேல் விஜயலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வர் என்பது குறிப்படத்தக்கதாகும்.

## புதிய காத்தான்குடியில் விபத்து மீனவர் ஒருவர் உயிரிழப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



புதிய காத்தான் குடி ஏ. எல். எஸ். மாதத்தை வீதியில் கடந்த புதன் கிழமை மாலை மாலை இடம்பெற்ற விபத்தில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதிய காத்தான்குடி அக்பர் பள்ளிவாசல் வீதியில் வசிக்கும் 43 வயதுடைய நாகூர் பிச்சை அலியார் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் மோட்டார் சைக்கிளில் வீதியால் வேகமாக சென்று கொண்டிருந்த போது வீதியின் அருகிலிருந்த சுற்று மதில் சுவரில் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிசாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவத்தில் உயிரிழந்த நபர் 7 பிள்ளைகளின் தந்தை என தெரிய வருகின்றது.

## சிறப்பாக நடைபெற்ற கோரக்கோயில் அகோர மாரியம்மன் ஆலய தீ மிதிப்பு





**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு கோரக்கோயில் ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு உற்சவம் நேற்று (21) வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. சுமார் ஆயிரம் பக்தர்கள் தீமிதிப்பில் கலந்து கொண்டனர்.

ஆலயத்தின் தீமிதிப்பு உற்சவம் கடல் நீர் எடுத்து வந்து திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது. ஆலய பிரதம பூசகர் முருகேசு ஜெகநாதன் தலைமையில் தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று பத்தாம் நாளான நேற்று 21ஆம் திகதி தீ மிதிப்பு உற்சவம் நடைபெற்றது.

## கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு உயிர் காப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**



கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 40 லட்சம் ரூபாய் பெறுமதியான உயிர் காப்பு இயந்திரங்கள் நேற்று (21) வெள்ளிக்கிழமை நன்கொடையாக அன்பளிப்பு செய்யப்பட்டது. நுகேகொடையைச் சேர்ந்த குணசேகர இந்த உபகரணங்களை அன்பளிப்பு செய்திருந்தார். அவருக்கேற்பட்ட அனுபவமே இத்தகைய உதவி செய்யக் காரணமாக இருந்தது. அவருடைய பிள்ளைப் பேற்றின் போது உயிர் காப்பு இயந்திரம் இல்லாமையினால் ஏற்பட்ட ஆபத்தை ஏனையோர் உணரக்கூடாது என்பதற்காக டாக்டர் சிறிநீதனூடாக அவ்வியந்திரத்தை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கினார். இந்த நன்கொடையில் 3 மில்லியன் ரூபா பெறுமதியான அதிநவீன இன்குபேட்டரும், 1 மில்லியன் ரூபா பெறுமதியான உயர் பாயும்திறன்கொண்ட ஒட்சிசன் இயந்திரமும் உள்ளடங்கும். இந்த முக்கியமான உபகரணங்களை. கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஏ.பி.ஆர்.எஸ். சந்திரசேனவிடம் நன்கொடையாளிகள் நேற்று வழங்கினர். இதன்போது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.இராஜேந்திரனும் சமூகமளித்திருந்தார்.

## சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் அடிக்கல் நடும் நிகழ்வு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் மற்றும் சுற்றுமதில் நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் முகத்தோற்றம் நீண்ட காலமாக பொலிவிழந்தும், மாணவர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் வகையிலும் காணப்பட்டதனை தொடர்ந்து பாடசாலைச் சமூகம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமிடம் கோரிக்கை முன் வைத்திருந்தது.



இவ்வருடம் (2024) அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரின் முன்மொழிவுக்கு அமைவாக 2 மில்லியன் நிதி குறித்த நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் எம்.ரீ.முஹம்மட் ஜனூபர் மற்றும் பொறியியலாளர் ஹனீஃப் மொஹமட் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக மேலதிகமாக 6.5 மில்லியன் நிதியினை நுழைவாயில் மற்றும் சுற்றுமதில் அமைப்பதற்காக ஜனாதிபதியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மிகக் குறுகிய காலத்திற்குள் பாராளுமன்ற உறுப்பினர் பெற்றுக்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில் ஊடக மன்றம்

ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
Sri Lanka Bureau of Foreign Employment

**நிந்தவூர் குறூப் நிருபர்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் ஊடக மன்றத்தை ஸ்தாபிக்கும் நிகழ்வானது, நாளை (23) மதியம் 12.00 மணி முதல் பி.ப. 4.00 மணிவரை, அம்பாறை மொண்டி விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வானது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வாறான ஊடக மன்றங்களை அமைக்கும் பணிகள் குருணாகல், அனுராதபுரம், மொனராகலை, கேகாலை, கண்டி, மாத்தளை, பொலன்னறுவை, வவுனியா, கம்பஹா, மன்னார், இரத்தினபுரி, முல்லைத்தீவு, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா, பதுளை, திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நிறைவு பெற்றுள்ளது.

# தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

## கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்' கொமர்ஷல் வங்கி ஊக்குவிப்பு திட்டம்

இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் தளமான கொமர்ஷல் வங்கியின் 'ComBank Digital' பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக கொமர்ஷல் வங்கி ஆரம்பித்த அற்புதமான புதிய பிரசாரத்தின் கீழ், 300 வாடிக்கையாளர்களின் மின்சாரக் கட்டணங்கள் வங்கியினால் மீள வழங்கப்படுவதுடன் மூன்று வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு சிங்கப்பூர் பயணப் பொதியை வெல்லவுள்ளனர்.

இந்த பெறுமதி மிக்க பரிசில்கள் இரண்டு ஊக்குவிப்பு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது. இதற்கிணங்க 'கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்' (Pay and Win) மற்றும் 'பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்' (Transact and Win) ஆகிய இரு ஊக்குவிப்பு திட்டங்களும் ஆகஸ்ட் 2024 இறுதி வரை நடைமுறையில் உள்ளதுடன் மேலும் இவை தற்போதுள்ள ComBank Digital இனை பயன்படுத்தும் அனைத்து பயனர்களுக்கும் தகுதி பெற்ற புதிய பதிவுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

'கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்' (Pay and Win) ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ComBank Digital மூலம் மின்கட்டணத்தைச் செலுத்தும் 300 வாடிக்கையாளர்களுக்கு 10,000 ரூபாய் வரை பணம் மீள வழங்கப்படும்.

ஒரே நேரத்தில் இயங்கும், 'பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்' (Transact and Win) ஊக்குவிப்பு திட்டமானது, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளைச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கானதாகும். இது தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மாதத்திற்கு மூன்று பயன்பாட்டு கட்டணங்களை செலுத்துதலை உள்ளடக்குகிறது. இவர்கள் சீட்டிழுப்புக்கு உள்ளாக்கப்பட்டு அதில் மூன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் 6 சிங்கப்பூர் சுற்றுப்பயணத்துக்கு தெரிவு செய்யப்படுவர்.

## கிம்பல்பதியாவ மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கிய AIA இன்சூரன்ஸ்



AIA இன்சூரன்ஸ் பெருநிறுவன வர்த்தக நாமப் பிரிவினுள் வகைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் மிகவும் போற்றப்படும் மற்றும் விரும்பப்படும் காப்புறுதி வழங்குநராகத் திகழ்வதோடு, இந்த வெசாக் பண்டிகையின் போது அநுராதபுரத்தின் கிம்பல்பதியாவ கிராம மக்களுக்கு மிகவும் சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை அவர்களின் வாழ்நாளில் கிடைக்கப் பெரும் மிகவும் சிறந்த பரிசாக அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்கியிருந்தது.

சுத்தமான குடிநீர் என்பது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான மற்றும் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து AIA இன்சூரன்ஸ் இக்கிராமப் புறச் சமூகத்தில் நீர் சுத்திகரிப்பு முறையினைச் செயல்படுத்தியிருந்தது. இந்த குறிப்பிடத்தக்க முன்முயற்சியானது அனைத்து இலங்கையர்களும் ஆரோக்கியமான, நீண்ட ஆயுளுடன், மிகச் சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் AIA இன் நீடித்த அர்ப்பணிப்பின் ஒரு சான்றாகும்.

75 மாணவர்கள் கல்வி கற்கும் ஆரம்பப் பாடசாலை உட்பட கிட்டத்தட்ட 1500 நபர்களை உள்ளடக்கிய 300 குடும்பங்கள் வசிக்கும் கிம்பல்பதியாவ கிராமத்தில் சுத்தமான குடிநீரைப் பெறுவது என்பது நீண்ட காலமாக அம்மக்களினால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கனவாகவே இருந்து வந்தது. இந்த இன்றியமையாத வளத்தின் பற்றாக்குறை அவர்களின் அன்றாட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது மட்டுமின்றி இலங்கையின் மிக முக்கியமான சமயப் பண்டிகைகளில் ஒன்றான வெசாக் பண்டிகையினைக் கொண்டாடுவதற்கும் மிகவும் தடையாக அமைந்து காணப்பட்டிருந்தது.

## A/L பரீட்சையில் சிறந்து விளங்கியோர் மக்கள் வங்கியினால் கௌரவிப்பு



2023 க.பொ.த உயர் தரப் பரீட்சையில் அனைத்து துறைகளிலும், அகில இலங்கை மற்றும் மாவட்ட மட்டங்களில் உச்ச ஸ்தானங்களைப் பிடித்துள்ள மாணவர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், அவர்களுக்கு பணப் பரிசுகளை அண்மையில் மக்கள் வங்கி வழங்கியுள்ளது.

அந்த வகையில், ஒவ்வொரு துறைகளின் கீழும் அகில இலங்கை ரீதியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூபா 150,000, ரூபா 100,000, மற்றும் ரூபா 75,000 பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உயிரியில் துறையில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட காலி சங்கமித்தை வித்தியாலயத்தின் பஹன்மா உபானி லெனோரா, கணிதத் துறையில் முதலிடத்தைப் பெற்ற கொழும்பு ஆனந்தா கல்லூரியின் சிரத் நிரோத, வர்த்தகத் துறையில் முதலிடத்தைப் பெற்ற பாணந்துறை மகளிர் கல்லூரியின் ஷெஹாரா சித்துமினி, கலைத் துறையில் முதலிடத்தைப் பெற்ற ரிச்மன்ட் கல்லூரியின் தசுன் ரித்மிகா விதானகே, பொறியியல் தொழில்நுட்பத் துறையில் முதலிடத்தைப் பெற்ற கினிகத்தேனை மத்திய உயர் பாடசாலையின் ஷெஹானி நவோத்யா, உயிரியல் தொழில்நுட்பத் துறையில் முதலிடத்தைப் பெற்ற எஹலியகொடை மத்திய உயர் பாடசாலையின் கிருளு ஷில்தியா ஆகியோர் உள்ளிட்ட மாணவர்களை மக்கள் வங்கி கௌரவித்துள்ளது.




ஸ்பா சிலோன் (Spa Ceylon) ஷங்கிரிலா கொழும்பு ஹோட்டலுடன் இணைந்து, சர்வதேச ஆரோக்கிய தினம் மற்றும் சர்வதேச யோகா தினம் போன்றவற்றை அடியொற்றியதாக 'Wellness Month' நிகழ்வுகளை முன்னெடுத்துள்ளது.

## "முதலீட்டாளர் வீசா" திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள இலங்கை

ஆதனத் துறையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு மூலோபாய நகர்வாக, "முதலீட்டாளர் வீசா" திட்டத்தை இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மீளவும் அறிமுகப்படுத்தியுள்ளது.

அடுக்குமனைகளை கொள்வனவு செய்ய விரும்புகின்ற இலங்கை பிரஜைகள் அல்லாதவர்களை குறிப்பாக இலக்கு வைக்கும் வகையில், மீளமைக்கப்பட்ட இந்த முயற்சி, 2024 ஜூன் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

கட்டுப்பாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற முதலீட்டாளர் வீசா திட்டமானது நாட்டின் ஆதனச் சந்தையில் முதலீடு செய்ய ஆர்வமாகவுள்ள இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்களுக்கு சீரமைக்கப்பட்ட, திறன்மிக்க நடைமுறையொன்றுக்கு உறுதியளிக்கின்றது.

வீசா விண்ணப்பங்கள் அனைத்தும் முற்றிலும் இணைய வழியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்து, முதலீட்டாளர்களாக மாற வாய்ப்புள்ளவர்களுக்கு இலகுபடுத்தப்பட்ட செயல்முறைக்கு இடமளிக்கின்றது. ஏற்கனவே இலங்கையில் வசிக்கின்ற வெளிநாட்டவர்கள் முதலீட்டு வீசாவுக்கு விண்ணப்பிப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறி, மீண்டும் திரும்பி வர வேண்டிய தேவை கிடையாது என்பது புதிய நடைமுறையின் முக்கியமான சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

வீசா விண்ணப்பத்திற்கான தேவைப்பாடுகள் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றை சமர்ப்பிக்க வேண்டும்:

1. உள்வரும் முதலீட்டுக் கணக்கில் வெளிநாட்டு நாணயம் வைப்புச் செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் வங்கிக் கடிதம்.

2. நாட்டில் அடுக்குமனை நிர்மாண செயற்திட்டமொன்றிலிருந்து அடுக்குமனை ஒன்றை அல்லது பலவற்றை கொள்வனவு செய்யும் முதலீட்டு நோக்கத்தை விளக்கும் வகையில் முதலீட்டாளரிடமிருந்து விளக்க அறிக்கை.

## பிரத்தியேக T20 உலகக் கிண்ண டிவி சலுகைகளை அறிமுகப்படுத்தும் Samsung




இலத்திரனியல் துறையில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Samsung Sri Lanka, தனது பிரத்தியேக T20 உலகக் கிண் தொலைக்காட்சி ஒப்பந்தங்களை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது, இது நாடு முழுவதும் உள்ள ரசிகர்களுக்கு இணையற்ற சேமிப்பு மற்றும் கிரிக்கெட் உற்சாகத்தை அளிக்கிறது.

இலங்கையில் கிரிக்கெட் ரசிகர்களிடையே கிரிக்கெட் போட்டி குறித்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையில், Samsung அதன் அதிநவீன தொலைக்காட்சிகள் மூலம் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்கு பார்க்கும் அனுபவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இப்போது எங்கேயும் இல்லாத வகையிலான விலையில் கிடைக்கிறது.

கிரிக்கெட் உணர்வைக் கொண்டாடும் வகையில், Samsung Sri Lanka பல்வேறு தொலைக்காட்சி வகைகளில், பல்வேறு தேர்வுகள் மற்றும் கையிலுள்ள பணத்திற்கேற்ப கவர்ச்சிகரமான சிறப்புச் சலுகைகளை வழங்குகிறது. உயர் தெளிவான Ultra HD Displayகள் வரை, Samsung TV வரிசை ஒவ்வொரு வீட்டிற்கும் மற்றும் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் சரியான பொருத்தம் இருப்பதை உறுதி செய்கிறது.

தயாரிப்பு வகைகளில் விலைகள் குறைக்கப்பட்டதால், குடும்பங்கள் இப்போது Samsungஇன் தொலைக்காட்சிகளுடன் கிரிக்கெட் போட்டிகளை முன்பை விட மலிவு விலையில் பார்த்து அனுபவிக்க முடியும்.

புகழ்பெற்ற 32" HD TV, அதன் மிருதுவான காட்சிகள் மற்றும் Immersive Sound சலுகையைக் கொண்டதுடன் இப்போது வெறும் 59,999 ரூபாவிற்கு வழங்கப்படுகிறது. சிறந்த பார்வை அனுபவத்தை விரும்புவோருக்கு, 32" HD Smart TV கவர்ச்சிகரமான 69,999 ரூபாவிற்கு கிடைக்கிறது.



## Penna Cement நிறுவனத்தை கையகப்படுத்திய அதானி குழுமம்

Penna Cement Industries Ltd. நிறுவனத்தை (PCIL) கையகப்படுத்துவதற்கான இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக, பன்முகப்படுத்தப்பட்ட அதானி குழுமத்தின் சீமெந்து மற்றும் கட்டுமானப் பொருள் நிறுவனமான Ambuja Cements Limited நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது.

PCIL இன் 100% பங்குகளை அதன் தற்போதைய விளம்பரதார குழுவான பி. பிரதாப் ரெட்டி மற்றும் குடும்பத்தினரிடமிருந்து கையகப்படுத்தப்படும். இந்த கையகப்படுத்தலுக்கான முழு நிதியுதவியும் அதானி குழுமத்தின் உள்ளக திரட்டல் மூலம் வழங்கப்படும்.

Ambuja Cements நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், ஆயுட்கால பணிப்பாளருமான அஜய் கபூர் தெரிவிக்கையில், "இந்த முக்கிய கையகப்படுத்தலானது, அம்புஜா நிறுவனத்தின் விரைவான வளர்ச்சிப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். PCIL இனை பெறுவதன் மூலம், அம்புஜா தனது சந்தை இருப்பை தென்னிந்தியாவில் விரிவுபடுத்தவும், சீமெந்துத் துறையில் முழு இந்திய அளவிலான தலைவராக தனது நிலையை வலுப்படுத்தவும் தயாராக உள்ளது. PCIL இன் மூலோபாய ரீதியான அமைவிடம் மற்றும் போதிய சுண்ணாம்புக் கற்களின் கையிருப்பு ஆகியன, மேலதிக முதலீடு மற்றும் திறனைக் குறைப்பதன் மூலம் சீமெந்து அளவை அதிகரிக்க வாய்ப்பளிக்கின்றன. முக்கியமாக, இலங்கைக்குள் நுழையும் பாதையைத் தவிர, இந்தியாவின் தீபகற்பத்தின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளுக்கு கடல் வழியான அணுகலை, மொத்த சீமெந்து முனையங்கள் (BCTs) வழங்குவதன் மூலம் இது ஒரு புரட்சியை ஏற்படுத்தும்." என்றார்.

PCIL ஆனது, 14 MTPA (வருடாந்தம் 14 மெட்ரிக் தொன்) சீமெந்து திறனைக் கொண்டுள்ளது. அதில் 10 MTPA செயற்பாட்டு ரீதியானது என்பதோடு, மீதமுள்ளவை கிருஷ்ணப்பட்டினம் (2 MTPA) மற்றும் ஜோத்பூர் (2 MTPA) ஆகிய இடங்களில் கட்டுமானப் பணியில் உள்ளதோடு, 6 முதல் 12 மாதங்களுக்குள் அவை நிறைவு செய்யப்படவுள்ளது. இதன் மூலம் செலவு மற்றும் செயற்றிறன் அதிகரிக்கப்படுகின்றது.

## DFCC மனித வள பரிமாண மாற்றத்தை முன்னெடுக்க பதும சுபசிங்க நியமனம்



DFCC வங்கி பீஎல்சி, அனுபவம் மிக்க மனித வள நிபுணர் பதும சுபசிங்க வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அணியில் சிரேஷ்ட உப தலைவர்/பிரதம மனித வள அதிகாரியாக இணைந்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது. மனித வள முகாமைத்துவத்தில் 22 ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட அனுபவத்தைக் கொண்டுள்ள அவர், மனித வள நிர்வாகத்தில் மகத்தான திறமைகளைக் கொண்டுள்ளார்.

சிரேஷ்ட உப தலைவர்/பிரதம மனித வள அதிகாரியாக வங்கியில் பதும புதிய பணிப்பொறுப்பில், தனது நீண்ட அனுபவத்தின் அனுகூலத்துடன், பணியாளர்களை மையமாகக் கொண்ட மனித வள கொள்கைகளை வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி, புத்தாக்கமான மற்றும் நெகிழ்வுப்போக்குடனான மனித வள நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, பெறுபேற்றுத் திறன் அடிப்படையிலான நிறுவன கலாசாரமொன்றை வளர்ப்பார்.

பதும DFCC வங்கியில் இணைந்து கொள்வதற்கு முன்னர் மாபெரும் சர்வதேச மதுபான நிறுவனமான Heineken குழுமத்தின் உறுப்பு நிறுவனமான Heineken Lanka இல் மனித வளப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார். Heineken Lanka நிறுவனத்தில் அவர் பணியாற்றிய போது, அவரது அதிசிறந்த திறமைகளுக்கான அங்கீகாரமாக அக்குழுமத்தின் Management Team Fast Track என்ற சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாரிய கூட்டு நிறுவனங்கள் குழுமம், தொலைதொடர்பாடல் பல்தேசிய நிறுவனங்கள், ஏற்றுமதி உற்பத்தி, மற்றும் ஆலோசனை போன்ற துறைகளில் அவர் மனித வள அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவரது தொழிற்பயணத்தில் சுறுசுறுப்பான மனித வள செயல்பாடு மற்றும் மாற்றத்திற்கான முகாமைத்துவம் ஆகியன அவரது குறிப்பிடத்தக்க பலமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் வெற்றியை முன்னெடுப்பதில் மனித மூலதனத்தின் முக்கியத்துவம் தொடர்பான தெளிவான புரிந்துணர்வுடன், ஒவ்வொரு ஊழியரும் தான் மதிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு மற்றும் உத்வேகம் பெறுவதை உணருகின்ற பணியிட கலாச்சாரத்தை நிலைநாட்டுவதில் பதும அர்ப்பணிப்புடன் உழைப்பார்.

# மேற்கிந்திய தீவுகளிடம் இலங்கை மகளிர் சாதனை வெற்றி: தொடரையும் முழுமையாக கைப்பற்றியது



மேற்கிந்திய மகளிர் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியிலும் 160 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை மகளிர் அணி தொடரை 3–0 என முழுமையாக கைப்பற்றியது.

இது இலங்கை மகளிர் அணி ஒருநாள் சர்வதேச போட்டியில் பெற்ற மிகப்பெரிய வெற்றியாகவும் இருந்தது. இதற்கு முன்னர் பாகிஸ்தான் மகளிர் அணிக்கு எதிராக 155 ஓட்டங்களால் வெற்றியீட்டிய சாதனையை இது முறியடித்தது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை மகளிர் அணிக்கு அணித் தலைவி சமரி அத்தபத்து சிறப்பாக செயற்பட்டு 106 பந்துகளில் 91 ஓட்டங்களை பெற்றதோடு ஆரம்ப விக்கெட்டுக்காக விஷ்மி குணரத்னவுடன் (44) சேர்ந்து 93 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டார்.

இலங்கை மகளிர் அணி விரைவாக 4 விக்கெட்டுகளை பறிகொடுத்த நிலையில் மத்திய வரிசையில் ஜோடி சேர்ந்த நிலக்ஷிகா சில்வா (63) மற்றும் அனுஷ்கா சஞ்சீவனி (55) 5 ஆவது விக்கெட்டுக்கு 117 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதன்மூலம் இலங்கை மகளிர் அணி 50 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை பெற்றது. இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுக்க 34.5 ஓவர்களில் 115 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஆரம்ப வீராங்கனை சதீன் நட்டியோன் பெற்ற 46 ஓட்டங்கள் அதிக பட்சமாகும்.

அபாரமாக பந்து வீசிய இடது கை சுழற்பந்து வீராங்கனை சச்சினி நிசன்சலா 5.5 ஓவர்களில் 28 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் மேற்கிந்திய தீவுகள் மற்றும் இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரின் முதல் போட்டி எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

# சம்பியனானது லீ ஸ்டார்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



சின்னப்பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று லீ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் (20) சின்னப்பாலமுனை அல்–ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று டீன் ஸ்டார் அணியை 3 ஓட்டங்களால் லீ ஸ்டார் அணி வீழ்த்தியது.

# அஸ்–ஸிறாஜ் அணி வெற்றி




**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பெபிள்ஸ் அகடமி நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுக்கு உட்பட்ட கால்பந்து தொடரில் அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலய அணி பெபிள்ஸ் கால்பந்து கேடயத்தை வென்றது.

பெபிள்ஸ் அகடமியின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ். இன்சாப் தலைமையில் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் மொத்தம் ஏழு பாடசாலை அணிகள் பங்கேற்றன. இதில் அக்கரைப்பற்று முனவ்வறா ஜூனியர் கல்லூரி அணியை வீழ்த்தியே அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

# இந்தியா, ஆஸி. 'சுப்பர் 8' சுற்றிலும் வெற்றி ஆரம்பம்





டி20 உலகக் கிண்ணத்தில் குழு 1 இற்கான சுப்பர் 8 போட்டிகளில் பலம்மிக்க இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் முறையே ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்து கொண்டன.

அன்டிகுவாவில் இலங்கை நேரப்படி நேற்று (21) நடைபெற்ற போட்டியில் பட் கம்மின்ஸின் ஹட்ரிக் விக்கெட் மூலம் ஆஸி. அணி 28 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை டக்வர்த் லுவிஸ் முறையில் வீழ்த்தியது.

பங்களாதேஷ் அணியை 8 விக்கெட் இழப்புக்கு 140 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்திய அவுஸ்ரேலிய அணி டேவிட் வோனர் 35 பந்துகளில் 53 ஓட்டங்களை பெற்று 11.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புகளுக்கு 100 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. போட்டியை தொடர முடியாத நிலையில் டக்வர்த் லுவிஸ் முறையில் முடிவு தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது உலகக் கிண்ணத்தில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய இரண்டாவது ஆஸி. வீரராக கம்மின்ஸ் பதிவானார். இதற்கு முன் 2007 இல் பங்களாதேஷுக்கு எதிரான பிரெட் லீ ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி இருந்தார்.

இதன்போது 18 ஆவது ஓவரின் கடைசி இரு பந்துகளிலும் மஹ்மூதுல்லா மற்றும் மஹதி ஹசனின் விக்கெட்டை வீழ்த்திய கமின்ஸ் 20 ஆவது ஓவரின் முதல் பந்தில் தவ்ஹீத் ஹிரிதோயின் விக்கெட்டை பதம் பார்த்தார்.

இதேவேளை பார்படோஸில் தனது முதல் சுப்பர் 8 சுற்றில் ஆப்கான் அணியை எதிர்கொண்ட இந்திய அணி 47 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது. நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இந்திய அணி சூரிய குமார் யாதவ் 28 பந்துகளில் 53 ஓட்டங்களை விளாச 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி 20 ஓவர்களில் 134 ஓட்டங்களுக்கு சுருண்டது.

# இஸ்ரேல்–லெபனானில் தொடர்ந்தும் மோதல்



போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா எல்லையில் மீண்டும் பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

லெபனான் மீதான தாக்குதல் ஒன்றுக்கு ஒப்புதல் கிடைத்திருப்பதாக இஸ்ரேல் அண்மையில் அறிவித்த நிலையில் பதிலுக்கு ஹிஸ்புல்லா அமைப்பு போர் எச்சரிக்கையை விடுத்த சூழலில் முழு அளவில் போர் மூழும் அச்சுறுத்தல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வடக்கு இஸ்ரேல் மீது பல டஜன் ரொக்கெட் குண்டுகளை வீசியதாக நேற்று முன்தினம் ஹிஸ்புல்லா குறிப்பிட்டது. தெற்கு லெபனானில் நடத்திய வான் தாக்குதலில் ஹிஸ்புல்லா போராளி ஒருவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறிய நிலையில் அதற்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் நிலைகள் மீது மேலும் தாக்குதல்களை நடத்தியதாக ஹிஸ்புல்லா குறிப்பிட்டது.

இந்நிலையில் போர் விமானங்கள் இரு ஆயுத களஞ்சியங்களை தாக்கியதாகவும் ஹிஸ்புல்லாவின் பல தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவம் கூறியதோடு தெற்கு லெபனானில் பல இடங்களிலும் பீரங்கி தாக்குதல்களை நடத்தி அச்சுறுத்தல்களை நீக்கியதாகவும் அது குறிப்பிட்டது. லெபனானின் தெற்கில் நேற்றுக் காலை புதிய வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக லெபனான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையிலான பரஸ்பரம் தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையிலேயே அது முழு அளவில் போராக வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகாரித்துள்ளது. இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா பதற்றத்தை தணிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# கடும் மோதலுக்கு மத்தியில் காசாவெங்கும் இஸ்ரேலியப் படை தொடர்ந்து குண்டு மழை

## ரபா நகரை முழுமையாக கைப்பற்ற முழு வீச்சில் தாக்குதல்



காசாவின் தெற்கு நகரான ரபா மற்றும் ஏனைய பகுதிகள் மீது இஸ்ரேலியப் படை நேற்றும் கடுமையான தாக்குதல்களை நடத்தியதோடு பலஸ்தீன போராளிகளுடன் சண்டையிட்டு வந்ததாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் இஸ்ரேலிய இராணுவத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதில் எகிப்து எல்லையை ஒட்டிய காசாவின் தென் முனையில் இருக்கும் ரபாவை கைப்பற்றும் தனது படை நடவடிக்கையை பூர்த்தி செய்யும் முயற்சியில் இஸ்ரேலியப் படை ஈடுபட்டு வருவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருந்து வந்த ரபா மீது சர்வதேச எதிர்ப்புக்கு மத்தியிலும் இஸ்ரேல் கடந்த மே ஆரம்பத்தில் படை நடவடிக்கையை ஆரம்பித்தது.

நகரின் மேற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் டாங்கிகள் முன்னேறி வருவதோடு இஸ்ரேலியப் படை ஏற்கனவே கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய பகுதிகளை கைப்பற்றியுள்ளது. வான், தரை மற்றும் கடற்கரைக்கு அப்பால் போர் கப்பல்கள் மூலம் சரமாரித் தாக்குதல்களை நடத்தும் நிலையில் இங்குள்ள மக்கள் வெளியேறி வருகின்றனர். காசாவின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களால் இடம்பெயர்ந்த ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ரபாவில் அடைக்கலம் பெற்றிருந்தனர்.

இஸ்ரேலியப் படை நேற்று நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரபாவில் உளவுத் தகவல் அடிப்படையிலான துல்லியமான படை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது. போராளிகள் பயன்படுத்தும் சுரங்கப்பாதைகளுக்கு அருகில் துருப்பினர் சண்டையிட்டு வருவதாகவும் அது கூறியது.

கடந்த இரண்டு தினங்களாக இஸ்ரேலிய சுற்றிவளைப்புகள் அதிகரித்திப்பதாக ரபா குடியிருப்பாளர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர். வெடிப்புகள் மற்றும் துப்பாக்கிச் சத்தங்களை கேட்கும்போது இடைவிடாது உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருவது தெரிகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

'கடந்த இரவு மேற்கு ரபாவில் மோசமான இரவாக இருந்தது. ஆளில்லா விமானங்கள், விமானங்கள், டங்கிகள் மற்றும் கடற்படை படகுகள் இங்கு குண்டுகளை வீசின. ஆக்கிரமிப்பாளர்கள் நகரை முழுமையாக கட்டுப்படுத்த முயல்கிறார்கள் என்று நாம் உணர்கிறோம்' என 45 வயதான ஹாதம் குறுஞ் செய்தி வழியாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'எதிர்ப்புப் போராளிகளிடம் இருந்து அவர்கள் கடும் தாக்குதல்களை எதிர்கொண்டு வரும் நிலையில் அது அவர்களின் முன்னேற்றத்தை மெதுவடையச் செய்துள்ளது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எட்டு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் போரில் இஸ்ரேலிய படையினர் காசாவில் இன்னும் நுழையாத இரு பகுதிகளான ரபாவின் தென் முனை மற்றும் மத்திய காசாவில் டெயிர் அல் பலாஹ்வை சூழவுள்ள பகுதிகளில் அதிக அவதானம் வெலுத்தி வருகின்றனர்.

'ரபாவின் ஒட்டுமொத்த நகரும் இஸ்ரேலிய படை நடவடிக்கை இடம்பெறும் பகுதியாக உள்ளது' என்று ரபா மேயரான அஹமது அல் சோபி நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்த நகரம் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதோடு இஸ்ரேலிய குண்டு வீச்சுகளால் மக்கள் தாம் தமது கூடாரங்களிலேயே கொல்லப்பட்டு வருகின்றனர்' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நகரில் மருத்துவ வசதிகள் இயங்கவில்லை என்று குறிப்பிட்ட சோபி, எஞ்சியுள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தமது நாளாந்த குறைந்தபட்ச உணவு மற்றும் நீருக்கும் பற்றாக்குறை நீடிப்பதாக குறிப்பிட்டார்.

ரபா நகரின் தூர மேற்குப் பக்கமாக 100,000க்கும் அதிகமான மக்கள் தொடர்ந்து வசித்து வருவதாக பலஸ்தீனர்கள் மற்றும் ஐ.நா. தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். கடந்த மே ஆரம்பத்தில் இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் காசாவின் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் ரபா நகரிலேயே அடைக்கலம் பெற்றிருந்தனர்.

ரபாவில் உள்ள ஷபூரா முகாமில் டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகளைக் கொண்டு இரு இஸ்ரேலிய டாங்கிகளை தாக்கியதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு கடந்த வியாழக்கிழமை கூறியது. இங்கிருந்து தப்ப முயன்ற இஸ்ரேலியப் படை வீரர் ஒருவரையும் கொன்றதாக அது கூறியது. இது தொடர்பில் இஸ்ரேல் தரப்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

அருகிலுள்ள கான் யூனிஸ் நகரில் நேற்று இடம்பெற்ற இஸ்ரேலிய வான் தாக்குதலில் தந்தை மற்றும் மகன் உட்பட மூவர் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேநேரம் வடக்கில் உள்ள காசா நகரின் சில புறநகர் பகுதிகளில் இஸ்ரேலியப் படை தொடர்ந்து முன்னேறி வருகிறது. இங்கு ஹமாஸ் தலைமையிலான பலஸ்தீன போராளிகளுடன் கடும் சண்டை நீடிப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. காசா நகரின் மையப் பகுதியில் இருக்கும் பல வீடுகளையும் இஸ்ரேலியப் படை அழித்ததாக குடியிப்பாளர்கள் தெரிவித்தனர்.

காசா நகரின் மாநகர வசதி மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் நான்கு மாநகர பணியாளர்கள் உட்பட ஐவர் கொல்லப்பட்டதாக காசா சிவில் அவசர சேவை பிரிவு தெரிவித்துள்ளது. இங்கு இடிபாடுகளில் உயிர் தப்பியவர்களை மீட்பாளர்கள் தொடர்ந்து தேடி வந்தனர்.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,500ஐ நெருங்கியுள்ளது.

# ஹஜ் யாத்திரிகர்களின் மரணம் 1000ஐ தாண்டியது: பெரும்பாலானோர் பதிவு செய்யப்படாத யாத்திரிகர்



இந்த ஆண்டு ஹஜ் கடமையில் மரணித்தவர்கள் எண்ணிக்கை 1,000ஐ தாண்டி இருப்பதோடு இதில் பாதிக்கும் அதிகமானவர்கள் கடுமையான வெப்பத்திற்கு மத்தியில் பதிவு செய்யப்படாது ஹஜ் யாத்திரையில் ஈடுபட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது.

எகிப்தைச் சேர்ந்த மேலும் 58 வழிபாட்டாளர்கள் மரணித்திருப்பதாக சவூதி அரேபிய இராஜதந்திர வட்டாரத்தை மேற்கோள்காட்டி நேற்று முன்தினம் செய்தி வெளியானது. இதன்படி எகிப்தைச் சேர்ந்த 658 யாத்திரிகர்கள் மரணத்திருப்பதோடு இதில் 630 பேர் பதிவு செய்யப்படாத யாத்திரிகர்களாவர்.

வசதி படைத்த முஸ்லிம்கள் குறைந்தது ஒரு முறை செய்ய வேண்டிய இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையின்போது சுமார் 10 நாடுகளைச் சேர்ந்த 1,081 பேர் மரணித்திருப்பதாக பதிவாகியுள்ளது. இம்முறை ஹஜ் கடமை சவூதியில் கடுமையான வெப்பம் கொண்ட கோடை காலத்தில் இடம்பெற்றிருந்தது. மக்காவில் உள்ள பெரிய பள்ளிவாசலில் இந்த வாரத்தில் 51.8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி இருப்பதாக தேசிய வானிலை மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஒவ்வொரு தசாப்தத்திலும் வெப்பநிலை 0.4 பாகை உயர்ந்து வருவதாக கடந்த மாதம் வெளியான சவூதியின் ஆய்வொன்று குறிப்பிட்டிருந்தது.

இதில் ஹஜ் கடமைக்கான உத்தியோகபூர் அனுமதிக்கான அதிக செலவை ஏற்க முடியாத ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் முறையற்ற வழிகளில் அந்தக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு பதிவு செய்யப்படாத ஆயிரக்கணக்கானவர்களை மக்காவில் இருந்து வெளியேற்றியதாக சவூதி நிர்வாகம் முன்னர் குறிப்பிட்டிருந்தது. எனினும் கடந்த வாரம் இடம்பெற்ற ஹஜ் வழிபாட்டில் கணிசமான பதிவு செய்யப்படாதவர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்களுக்கு உத்தியோகபூர்வ அனுமதி இல்லாததால் ஹஜ் யாத்திரிகர்களுக்கு வழங்கப்படும் குளிரூட்டப்பட்ட வசதிகள் கிடைப்பதில்லை.

'அரபா தினத்திற்கு முன்னர் பாதுகாப்புப் படையினரால் துரத்தப்பட்ட மக்கள் களைப்படைத்துள்ளனர். அவர்கள் சோர்வடைந்தனர்' என்று அரபு இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஹஜ் கடமையின் முக்கிய அம்சமான முழு நாளும் வெட்ட வெளியில் வழிபாட்டில் ஈடுபடும் நிகழ்வு குறித்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதில் எகிப்தியர் இடையே ஏற்பட்ட மரணங்களுக்கான பிரதான காரணம் கடுமையான வெப்பம் என்று குறிப்பிட்டுள்ளனர். கடும் வெப்பம் உயர் இரத்த அழுத்தம் மற்றும் ஏனைய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

தவிர, பாகிஸ்தான், இஸ்தோனேசியா போன்ற நாடுகளிலும் அதிக மரணங்கள் பதிவாகியுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 22ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.